தமிழ்நாடு அரசு

ஏழாம் வகுப்பு

முதல் பருவம்

தொகுதி - 1

தமிழ்
ENGLISH

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

7th Std - Tamil_2025_Term_I_FM.indd 1 28/01/2025 15:34:15

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - *2019*

திருத்திய பதிப்பு - *2020, 2021, 2022, 2023, 2025*

மறுபதிப்பு - *2024*

(புதிய பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவநூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24 × 7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
அழையுங்கள் குழந்தை உதவி எண் **1098**
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

CHILD LINE 1098 NIGHT & DAY

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த துன்புறுத்தலுக்கு அல்லது அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு வழிகாட்டுதல் தேவையா?
அழையுங்கள் **14417**
உங்கள் விவரங்கள் பிறருக்குத் தெரியாமல் பாதுகாக்கப்படும்

14417 கல்வித் தகவல் மையம்

7th Std - Tamil_2025_Term_I_FM.indd 2 28/01/2025 15:34:16

முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்.

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே!

உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

7th Std - Tamil_2025_Term_I_FM.indd 4 28/01/2025 15:34:17

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

7th Std - Tamil_2025_Term_I_FM.indd 5 28/01/2025 15:34:18

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும் சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

7th Std - Tamil_2025_Term_I_FM.indd 6 28/01/2025 15:34:18

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

ஒவ்வோர் இயலையும் ஆர்வத்துடன்
அணுக உரைநடைஉலகம்,
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக . . . . .

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ள
தெரிந்து தெளிவோம். . . .

ஆளுமை மிக்க
ஆசிரியர்களுக்கும்
ஆற்றல் நிறை
மாணவர்களுக்கும்...

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாகக்
கற்பவை கற்றபின் . . . .

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழியோடு விளையாடு . . . .

மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு . . . .

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்….. புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்…

பொருளடக்கம்

வ. எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	பக்க எண்	மாதம்
1	மொழி	எங்கள் தமிழ் *	2	
		ஒன்றல்ல இரண்டல்ல	5	
	அமுதத் தமிழ்	பேச்சுமொழியும் எழுத்துமொழியும்	8	ஜூன்
		ஆளுக்கு ஒரு வேலை (பொம்மலாட்டம்)	13	
		குற்றியலுகரம், குற்றியலிகரம்	17	
2	இயற்கை	காடு *	24	
		அப்படியே நிற்கட்டும் அந்த மரம்	27	
	அணிநிழல் காடு	தமிழரின் கப்பற்கலை	30	
		விலங்குகள் உலகம்	35	ஜூலை
		நால்வகைக் குறுக்கங்கள்	39	
		திருக்குறள் *	43	
3	நாடு, சமூகம்	விடுதலைத் திருநாள்	48	
		தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ.முத்துராமலிங்கத்தேவர்	51	
	நாடு அதை நாடு	கப்பலோட்டிய தமிழர்	56	ஆகஸ்டு, செப்டம்பர்
		ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்	60	
		திருக்குறள்	67	

(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி

ADFT7

மின் நூல்

CDOZE

மதிப்பீடு

இயல் ஒன்று

அமுதத் தமிழ்

கற்றல் நோக்கங்கள்

- செய்யுளைப் படித்து அதன் மையக்கருத்தை எடுத்து உரைத்தல்
- பழந்தமிழ் இலக்கியங்களையும் வள்ளல்களையும் பற்றி அறிதல்
- பேச்சுமொழி, எழுத்துமொழியின் நுட்பங்களை அறிதல்
- சொலவடைகளில் பொதிந்துள்ள சமூக உண்மைகளைக் கண்டறிதல்
- குற்றியலுகர, குற்றியலிகரச் சொற்களை அடையாளம் கண்டு அதன் வகைகளை அறிதல்

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 1 22/01/2025 17:35:13

கவிதைப்பேழை

இயல் ஒன்று

எங்கள் தமிழ்



உலகின் தொன்மையான மொழிகளுள் நம் தமிழ் மொழி குறிப்பிடத்தக்கது ஆகும். அது மென்மையும் இனிமையும் வளமையும் உடையது; வாழ்வுக்குத் தேவையான அன்பையும் அறத்தையும் கூறுவது; காலச்சூழலுக்கு ஏற்ப மாற்றங்களை ஏற்று, என்றும் இளமையோடு திகழ்வது. அத்தகு தமிழ்மொழியின் சிறப்பை நாமக்கல் கவிஞரின் பாடல் மூலம் அறிவோம்.

*அருள்நெறி அறிவைத் தரலாகும்
அதுவே தமிழன் குரலாகும்
பொருள்பெற யாரையும் புகழாது
போற்றா தாரையும் இகழாது

கொல்லா விரதம் குறியாக
கொள்கை பொய்யா நெறியாக
எல்லா மனிதரும் இன்புறவே
என்றும் இசைந்திடும் அன்பறமே

அன்பும் அறமும் ஊக்கிவிடும்
அச்சம் என்பதைப் போக்கிவிடும்
இன்பம் பொழிகிற வானொலியாம்
எங்கள் தமிழெனும் தேன்மொழியாம்*

–நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கனார்

சொல்லும் பொருளும்

ஊக்கிவிடும் –	ஊக்கப்படுத்தும்	குறி –	குறிக்கோள்
விரதம் –	நோன்பு	பொழிகிற –	தருகின்ற

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 2 22/01/2025 17:35:14

பாடலின் பொருள்

நம் தாய்மொழியாம் தமிழ் மொழி, அருள் நெறிகள் நிரம்பிய அறிவைத் தருகிறது. அதுவே தமிழ்மக்களின் குரலாகவும் விளங்குகிறது. தமிழ் மொழியைக் கற்றோர், பொருள் பெறுவதற்காக யாரையும் புகழ்ந்து பேசமாட்டார். தம்மைப் போற்றாதவர்களையும் இகழ்ந்து பேசமாட்டார்.

கொல்லாமையைக் குறிக்கோளாகவும் பொய்யாமையைக் கொள்கையாகவும் கொண்டு, எல்லா மனிதர்களும் இன்புற்று வாழ அன்பும் அறமும் உதவும்.

நம் தமிழ்மொழி அனைவரிடத்தும் அன்பையும் அறத்தையும் தூண்டும். அஃது அச்சத்தைப் போக்கி இன்பம் தரும். நம் தமிழ்மொழி தேன் போன்ற மொழி ஆகும்.

எதுகை

அருள்நெறி – பொருள்பெற, கொல்லா – எல்லா, அன்பும் – இன்பம்

ஆகிய சொற்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வந்துள்ளது. இவ்வாறு இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதை எதுகைத்தொடை என்பர். எதுகைத்தொடை முதல் எழுத்து அளவொத்து இருக்க வேண்டும்.

மோனை

அருள்நெறி – அதுவே, பொருள்பெற – போற்றா, கொல்லா – கொள்கை

ஆகிய சொற்களில் முதல் எழுத்து ஒன்றி வந்துள்ளது. இவ்வாறு முதல் எழுத்து ஒன்றி வருவதை மோனைத்தொடை என்பர். மோனைத்தொடையில் குறில், நெடில் மாறியும் வரலாம்.

இயைபு

தரலாகும் – குரலாகும், புகழாது – இகழாது, குறியாக – நெறியாக

என அடிகளின் இறுதியில் வரும் சொற்கள் ஒரே ஓசையில் முடிந்துள்ளன. இவ்வாறு சொற்கள் ஒத்த ஓசையிலோ ஒரே எழுத்திலோ முடிவதை இயைபுத்தொடை என்கிறோம்.

நூல் வெளி

இப்பாடலின் ஆசிரியரை, நாமக்கல் கவிஞர் என்றும் அழைப்பர். இவர் தமிழறிஞர், கவிஞர், ஓவியர், விடுதலைப் போராட்ட வீரர் எனப் பன்முக ஆளுமைத்தன்மை கொண்டவர். காந்தியடிகளின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுக் காந்தியத்தைப் பின்பற்றியதால் இவர் காந்தியக்கவிஞர் என்றும் அழைக்கப்படுகிறார். தமிழ்நாட்டு அரசின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர். மலைக்கள்ளன், தமிழன் இதயம், என்கதை, சங்கொலி உள்ளிட்ட பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்.



இப்பாடல் 'நாமக்கல் கவிஞர் பாடல்கள்' என்னும் நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 3 22/01/2025 17:35:14

கற்பவை கற்றபின்

1. "எங்கள் தமிழ்" – பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. பின்வரும் பாடலைப் படித்துச் சுவைக்க.

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தி யத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!... (கத்தியின்றி...)
கண்ட தில்லை கேட்ட தில்லை
சண்டை யிந்த மாதிரி
பண்டு செய்த புண்ணி யந்தான்
பலித்த தேநாம் பார்த்திட!... (கத்தியின்றி...)

– நாமக்கல் கவிஞர்

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'நெறி' என்னும் சொல்லின் பொருள் __________.

அ) வழி ஆ) குறிக்கோள் இ) கொள்கை ஈ) அறம்

2. 'குரலாகும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

அ) குரல் + யாகும் ஆ) குரல் + ஆகும்
இ) குர + லாகும் ஈ) குர + ஆகும்

3. வான் + ஒலி என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

அ) வான்ஒலி ஆ) வானொலி இ) வாவொலி ஈ) வானெலி

குறுவினா

1. தமிழ்மொழியின் பண்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
2. தமிழ்மொழியைக் கற்றவரின் இயல்புகளை எழுதுக.

சிறுவினா

'எங்கள் தமிழ்' என்னும் பாடலில் நாமக்கல் கவிஞர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

சிந்தனை வினா

கவிஞர், தமிழை ஏன் தேனுடன் ஒப்பிடுகிறார்?

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 4   22/01/2025 17:35:14

கவிதைப்பேழை

இயல் ஒன்று

ஒன்றல்ல இரண்டல்ல

நுழையும்முன்

தமிழ்நாடு நிலவளமும் நீர்வளமும் மட்டுமன்றிப் பொருள்வளமும் அருள்வளமும் நிறைந்தது. அதே போல தமிழ்மொழி இலக்கிய வளமும் இலக்கண வளமும் நிறைந்தது. தமிழ்நாட்டு மன்னர்களும் வள்ளல்களும் கொடைத்திறன் மிக்கவர்களாக விளங்கினர். இக்கருத்துகளை விளக்கும் பாடலை அறிவோம்.

ஒன்றல்ல இரண்டல்ல தம்பி – சொல்ல
ஒப்புமை இல்லாத அற்புதம் தமிழ்நாட்டில்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

தென்றல் தரும் இனிய தேன்மண மும்கமழும்
செங்கனியும் பொன்கதிரும் தந்துதவும் நன்செய்வளம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

பகைவென்ற திறம்பாடும் பரணிவகை – செழும்
பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை – வான்
புகழ்கொண்ட குறளோடு அகம்புறமும் – செம்
பொருள்கண்ட தமிழ்ச்சங்க இலக்கியப் பெருஞ்செல்வம்
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

முல்லைக்குத் தேர்கொடுத்தான் வேள்பாரி – வான்
முகிலினும் புகழ்படைத்த உபகாரி – கவிச்
சொல்லுக்குத் தலைகொடுத்தான் அருள்மீறி – இந்த
வள்ளலாம் குமணன்போல் வாழ்ந்தவர் வரலாறு
(ஒன்றல்ல இரண்டல்ல தம்பி...)

– உடுமலை நாராயணகவி

சொல்லும் பொருளும்

ஒப்புமை – இணை
அற்புதம் – வியப்பு
முகில் – மேகம்
உபகாரி – வள்ளல்

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 5 22/01/2025 17:35:14

பாடலின் பொருள்

தமிழ்நாட்டின் பெருமைகளைக் கூறினால் அவை ஒன்றிரண்டல்ல, பலவாகும். அவை வேறு எவற்றோடும் இணைசொல்ல முடியாத விந்தைகளாகும். இங்கு வீசும் தென்றலில் தேன்மணம் கமழும். சுவைமிகு கனிகளும் பொன் போன்ற தானியக் கதிர்களும் விளையும். தமிழ்நாட்டின் நன்செய் நிலவளம் ஒன்றிரண்டல்ல, பலவாகும்.

பகைவரை வென்றதைப் பாடுவது பரணி இலக்கியம். அத்தோடு இசைப்பாடலான பரிபாடலும் கலம்பக நூல்களும் எட்டுத்தொகையும் வான்புகழ் கொண்ட திருக்குறளும் அகம், புறம் ஆகியவற்றை மெய்ப்பொருளாகக் கொண்டு பாடப்பட்ட சங்க இலக்கியங்களும் எனத் தமிழின் இலக்கிய வளங்கள் ஒன்றிரண்டல்ல, பலவாகும்.

முல்லைக்குத் தேர்தந்து மழைமேகத்தைவிடப் புகழ்பெற்றான் வள்ளல் வேள்பாரி. புலவரின் சொல்லுக்காகத் தன் தலையையே தரத் துணிந்தான் குமண வள்ளல். இவர்கள்போல் புகழ் பெற்று வாழ்ந்த வள்ளல்களின் வரலாறு ஒன்றிரண்டல்ல, பலவாகும்.

நூல் வெளி

பகுத்தறிவுக் கவிராயர் என்று புகழப்படுபவர் உடுமலை நாராயணகவி. இவர் தமிழ்த் திரைப்படப் பாடலாசிரியராகவும் நாடக எழுத்தாளராகவும் புகழ் பெற்றவர். தமது பாடல்கள் மூலம் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்பியவர். நாட்டுப்புற இசையின் எளிமையைக் கையாண்டு கவிதைகள் எழுதியவர். இவரது பாடல் ஒன்று இங்குத் தரப்பட்டுள்ளது.

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 6 22/01/2025 17:35:15

கற்பவை கற்றபின்

1. தமிழுக்குக் கொடை கொடுத்த வள்ளல்கள் பற்றிய செய்திகளைத் திரட்டுக.
2. தமிழில் உள்ள பல்வேறு இலக்கிய வடிவங்களின் பெயர்களைப் பட்டியலிடுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பகைவரை வெற்றி கொண்டவரைப் பாடும் இலக்கியம் _________.
   அ) கலம்பகம் ஆ) பரிபாடல் இ) பரணி ஈ) அந்தாதி

2. வானில் _____ கூட்டம் திரண்டால் மழை பொழியும்.
   அ) அகில் ஆ) முகில் இ) துகில் ஈ) துயில்

3. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
   அ) இரண்டு + டல்ல ஆ) இரண் + அல்ல
   இ) இரண்டு + இல்ல ஈ) இரண்டு + அல்ல

4. 'தந்துதவும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _________.
   அ) தந்து + உதவும் ஆ) தா + உதவும்
   இ) தந்து + தவும் ஈ) தந்த + உதவும்

5. ஒப்புமை + இல்லாத என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.
   அ) ஒப்புமைஇல்லாத ஆ) ஒப்பில்லாத
   இ) ஒப்புமையில்லாத ஈ) ஒப்புஇல்லாத

குறுவினா

1. தமிழ்நாட்டின் இயற்கை வளங்களாகக் கவிஞர் கூறுவன யாவை?
2. 'ஒன்றல்ல இரண்டல்ல' – பாடலில் இடம்பெற்றுள்ள வள்ளல்கள் குறித்த செய்திகளை எழுதுக.

சிறுவினா

தமிழுக்கு வளம் சேர்க்கும் இலக்கிய வகைகளாகக் கவிஞர் கூறுவன யாவை?

சிந்தனை வினா

தமிழில் அற இலக்கியங்கள் மிகுதியாகத் தோன்றக் காரணம் என்ன?

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 7 22/01/2025 17:35:15

இயல் ஒன்று

பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

நுழையும்முன்

தமிழ்மொழி பழமையும் புதுமையும் நிறைந்த சிறந்த மொழி. இது பேச்சுமொழி, எழுத்துமொழி என்னும் இரு கூறுகளைக் கொண்டது. இவ்விரண்டு கூறுகளுக்கும் இடையே ஒற்றுமையும் உண்டு; வேற்றுமையும் உண்டு. பேச்சுமொழி, எழுத்துமொழி ஆகியவற்றின் நுட்பங்களை அறிவோம்.

தனது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்துவதற்காக மனிதனால் உருவாக்கப்பட்டதே மொழி ஆகும். அஃது ஒருவர் கருத்தை மற்றொருவர் அறிந்து, செயல்பட உதவுகிறது. மொழியின் மூலமாகவே மனிதர்களின் சிந்தனை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. மொழி இல்லையேல் மனித சமுதாயம் இன்று அடைந்திருக்கும் முன்னேற்றத்தை எட்டியிருக்க முடியாது.

பழங்காலத்தில் மனிதர்கள் தனித்தனிக் குழுக்களாக வாழ்ந்து வந்தனர். அவர்கள் தங்களுக்குள் தனித்தனியான ஒலிக் குறியீடுகளை உருவாக்கிக்கொண்டனர். இதன் காரணமாகவே மொழிகள் பல தோன்றின.

மொழியின் வடிவங்கள்

வாயினால் பேசப்பட்டுப் பிறரால் கேட்டு உணரப்படுவது பேச்சுமொழியாகும். இவ்வாறு கேட்பதும் பேசுவதும் மொழியின் முதல் நிலை. கண்ணால் கண்டு உணருமாறு வரிவடிவமாக எழுதப்பட்டுப் படிக்கப்படுவது எழுத்துமொழியாகும். இவ்வாறு

படிக்கப்படுவதும் எழுதப்படுவதும் மொழியின் இரண்டாம் நிலை. ஒலி வடிவில் அமையும் பேச்சுமொழியானது உடனடிப் பயன்பாட்டிற்கு உரியது. வரிவடிவில் அமையும் எழுத்து மொழியானது நீண்டகாலப் பயன்பாட்டிற்கு உரியது. நேரில் காண இயலாத நிலையில் செய்தியைத் தெரிவிக்க எழுத்துமொழி உதவுகிறது. மனிதர்களின் சிந்தனைகள் காலம் கடந்து வாழ்வதற்கும் எழுத்துமொழியே காரணமாகின்றது. உலகில் சில மொழிகள் பேச்சுமொழியாக மட்டுமே உள்ளன. சில மொழிகள் எழுத்து மொழியாக மட்டுமே உள்ளன. ஆனால், தமிழ்மொழியில் பேச்சு, எழுத்து ஆகிய இரண்டு வடிவங்களும் பயன்பாட்டில் உள்ளன.

பேச்சுமொழி

மொழியின் உயிர்நாடியாக விளங்குவது பேச்சுமொழியே என்பர். பேச்சுமொழி உணர்வுகளை எளிதாக வெளிப்படுத்தும்; அது கருத்தை வெளிப்படுத்துவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டது.

பேச்சுமொழியில் பொருள் வேறுபாடு

பேசப்படும் சூழலைப் பொறுத்துப் பேச்சுமொழியின் பொருள் வேறுபடும். எடுத்துக்காட்டாகக் 'குழந்தையை நல்லாக் கவனிங்க' என்று கூறும்போது 'கவனி' என்னும் சொல் பேணுதல் என்னும் பொருளைத் தருகிறது. 'நில், கவனி, செல்' என்பதில் 'கவனி' என்னும் சொல் நின்று, கவனித்துச் செல் என்னும் 'பாதுகாப்புப் பொருளைத் தருகிறது'. அதுபோலவே பேசும்போது இடம்பெறும் ஏற்ற இறக்கமும் பொருள் வேறுபாட்டைத் தரும். எடுத்துக்காட்டாக என்னால் போக முடியாது என்னும் தொடர் ஓங்கி ஒலிக்கும்போது மறுப்பை உணர்த்துகிறது. மென்மையாக ஒலிக்கும்போது இயலாமையை உணர்த்துகிறது.

இவ்வாறு சொல்லை ஒலிப்பதில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தால், பொருள் வேறுபடும் என்பதை,

"எடுத்தல் படுத்தல் நலிதல் உழப்பில்
திரிபும் தத்தமில் சிறிது உள வாகும்"

என்னும் நன்னூல் நூற்பா உணர்த்துகிறது.

> **தெரிந்து தெளிவோம்**
>
> 'பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி; எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்தநிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவையே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவு காணப்படுவது ஆகியவையும் மொழியே ஆகும்'
>
> – மு.வரதராசனார்

வட்டாரமொழி

பேச்சுமொழி இடத்திற்கு இடம் மாறுபடும். மனிதர்களின் வாழ்வியல் சூழலுக்கு ஏற்பவும் மாறுபடும். இவ்வாறு மாறுபடும் ஒரே மொழியின் வெவ்வேறு வடிவங்களை வட்டார மொழி என்பர். எடுத்துக்காட்டாக 'இருக்கிறது' என்னும் சொல்லை 'இருக்கு', 'இருக்குது', 'கீது' என்று தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு வகையாகச் சொல்லுவர். இத்தகைய வேறுபாடுகள் காரணமாகவே வட்டார வழக்குகள் தோன்றுகின்றன.

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 9 22/01/2025 17:35:15

கிளைமொழி

ஒரே மொழியைப் பேசும் மக்கள் வெவ்வேறு இடங்களில் வாழ்வதும் உண்டு. வாழும் இடத்தின் நில அமைப்பு, இயற்கைத் தடைகள் போன்றவற்றின் காரணமாக அவர்கள் பேசும் மொழியில் சிறிதுசிறிதாக மாற்றங்கள் ஏற்படும். அவர்களுக்கு இடையேயான தொடர்பு குறையும் பொழுது இம்மாற்றங்கள் மிகுதியாகிப் புதிய மொழியாகப் பிரியும். அவ்வாறு உருவாகும் புதிய மொழியைக் கிளைமொழி என்பர். கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய திராவிட மொழிகள் தமிழிலிருந்து பிரிந்து சென்ற கிளைமொழிகள் ஆகும்.

எழுத்துமொழி

பேச்சுமொழிக்கு நாம் தந்த வரிவடிவமே எழுத்து மொழியாகும். ஒரு மொழியானது நீண்ட காலம் நிலைபெறுவதற்கு எழுத்து வடிவம் இன்றியமையாதது. பல நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட இலக்கியங்கள் எழுத்து வடிவில் இருப்பதால்தான் நம்மால் இன்றும் படிக்க முடிகிறது. எழுத்துமொழியில் காலம், இடம் ஆகியவற்றுக்கு ஏற்பச் சொற்கள் சிதைவதில்லை. ஆனால், வரிவடிவம் மாறுபடும். எடுத்துக்காட்டாக முற்காலத்தில் அண்ணு, காலே என்று எழுதியவற்றை இக்காலத்தில் அண்ணா, காலை என்று எழுதுகிறோம்.

பேச்சுமொழியும் எழுத்துமொழியும்

பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் ஒருசில வேறுபாடுகள் உள்ளன. பேச்சுமொழியில் சொற்கள் பெரும்பாலும் குறுகி ஒலிக்கும். எழுத்துமொழியில் சொற்கள் முழுமையாக எழுதப்படும். எடுத்துக்காட்டாக 'நல்லாச் சாப்ட்டான்' என்பது பேச்சுமொழி. 'நன்றாகச் சாப்பிட்டான்' என்பது எழுத்துமொழி.

பேச்சுமொழியில் உணர்ச்சிக் கூறுகள் அதிகமாக இருக்கும். எழுத்துமொழியில் உணர்ச்சிக் கூறுகள் குறைவு. 'உம்', 'வந்து' போன்றவற்றைச் சொற்களுக்கு இடையே பொருளின்றிப் பேசுவது உண்டு. ஆனால், எழுத்து முறையில் இவை இடம் பெறுவதில்லை.

பேச்சுமொழியில் உடல்மொழியும் குரல் ஏற்றத்தாழ்வும் இணைவதால் அஃது எழுத்துமொழியை விட எளிமையாகக் கருத்தை உணர்த்துகிறது. இதற்கு எழுத்துமொழியில் இடமில்லை.

பேச்சுமொழியில் எழுத்துகளை மாற்றி ஒலிப்பதும் உண்டு. 'இ' என்பதை 'எ' என்றும் 'உ' என்பதை 'ஒ' என்றும் மாற்றி ஒலிப்பர். எடுத்துக்காட்டாக 'இலை' என்பதை 'எல' என்றும் 'உலகம்' என்பதை 'ஒலகம்' என்றும் ஒலிப்பர். இம்மாறுபாடுகள் எழுத்துமொழியில் இல்லை.

இரட்டை வழக்கு

பேச்சுமொழியை உலக வழக்கு என்றும், எழுத்துமொழியை இலக்கிய வழக்கு என்றும் கூறுவர். ஒரு மொழி உயிர்ப்போடு இருப்பதற்குப் பேச்சுமொழியும் காலம் கடந்து இருப்பதற்கு எழுத்துமொழியும் தேவைப்படுகின்றன. இவ்விரு வடிவங்களையும் சரியாக அறிந்து கொண்டால் மொழியின் நுட்பங்களைப்

> **தெரிந்து தெளிவோம்**
>
> பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே பெரிய அளவில் வேறுபாடு இருந்தால் அஃது இரட்டை வழக்கு மொழி (Diglossic Language) எனப்படும். தமிழில் பழங்காலம் முதலே பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் இடையே வேறுபாடு இருந்துள்ளது. தொல்காப்பியர் இவற்றை உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்று கூறியுள்ளார்.

புரிந்துகொள்ள முடியும். தமிழில் பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே வேறுபாடு உண்டு. எனவே, தமிழை இரட்டை வழக்கு மொழி என்பர்.

ஊடகங்களில் தமிழ்மொழி

மேடைப்பேச்சிலும், வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் எழுத்துமொழியாகிய இலக்கியத்தமிழே பயன்பட்டு வந்தது. ஆனால், இக்காலத்தில் அந்நிலை பெரும்பாலும் மாறிவிட்டது; பேச்சுத்தமிழ் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

> **தெரிந்து தெளிவோம்**
>
> இக்காலத்தில் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் மூலம் சான்றோர்களின் உரைகள் ஒலிப்பதிவு மற்றும் ஒளிப்பதிவு செய்யப்படுகின்றன. இதன் காரணமாகப் பேச்சுமொழியும் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாளேடுகள் மற்றும் பருவ இதழ்களில் இன்றும் எழுத்துத் தமிழே பயன்படுத்தப்பட்டு வருகிறது. பேச்சுத்தமிழில் காலந்தோறும் ஏற்பட்டு வரும் மாற்றங்களைத் தவிர்க்க இயலாது. ஆனால், ஊடகங்களிலும் இலக்கியங்களிலும் திருத்தமான தமிழையே பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் நம் தாய்மொழியைச் சிதையாமல் காக்க முடியும்.

"எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்.
வெளியுலகில், சிந்தனையில் புதிதுபுதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்கள் எல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடிஎலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்."

என்பது பாவேந்தரின் ஆசை. அதன்படி நம் செந்தமிழ்மொழி செழுந்தமிழாய் விளங்கப் பாடுபடுவோம்.

கற்பவை கற்றபின்

1. உங்கள் வீட்டில் பயன்படுத்தும் பேச்சுவழக்குத் தொடர்களுக்கு இணையான எழுத்துவழக்குத் தொடர்களை எழுதி வருக.

   (எ.கா.) பேச்சுமொழி : அம்மா பசிக்கிது. எனக்குச் சோறு வேணும்.
   எழுத்துமொழி : அம்மா! பசிக்கிறது. எனக்குச் சோறு வேண்டும்.

2. பேசும்போது சில நேரங்களில் சொற்களின் இறுதியில் உகரம் சேர்ந்து ஒலிப்பது உண்டு. 'ஆ' என்னும் எழுத்து இகரமாக மாறுவதும் உண்டு. அவ்வாறு ஒலிக்கும் சொற்களை எழுதி அவற்றுக்கு இணையான எழுத்துவழக்குச் சொற்களையும் எழுதுக. (எ.கா.) சொல்லு – சொல்   வந்தியா – வந்தாயா?
   நில்லு – நில்   சாப்ட்டியா – சாப்பிட்டாயா?

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 11 22/01/2025 17:35:16

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மொழியின் முதல்நிலை கேட்டல், _________ ஆகியனவாகும்.

   அ) படித்தல் ஆ) பேசுதல் இ) எழுதுதல் ஈ) வரைதல்

2. ஒலியின் வரிவடிவம் __________ ஆகும்.

   அ) பேச்சு ஆ) எழுத்து இ) குரல் ஈ) பாட்டு

3. தமிழின் கிளைமொழிகளுள் ஒன்று __________.

   அ) உருது ஆ) இந்தி இ) தெலுங்கு ஈ) ஆங்கிலம்

4. பேச்சுமொழியை _________ வழக்கு என்றும் கூறுவர்.

   அ) இலக்கிய ஆ) உலக இ) நூல் ஈ) மொழி

சரியா தவறா என எழுதுக.

1. மொழி காலத்திற்கு ஏற்ப மாறுகிறது.
2. எழுத்துமொழி காலம் கடந்தும் நிலைத்து நிற்கிறது.
3. பேசுபவரின் கருத்திற்கு ஏற்ப உடனடிச் செயல்பாட்டிற்கு உதவுவது எழுத்துமொழி.
4. எழுத்து மொழியில் உடல்மொழிக்கு வாய்ப்பு அதிகம்.
5. பேச்சுமொழி சிறப்பாக அமையக் குரல் ஏற்றத்தாழ்வு அவசியம்.

பேச்சுமொழி, எழுத்துமொழி பயன்பாட்டின் அடிப்படையில் ஊடகங்களை வகைப்படுத்துக.

வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள், நூல்கள், திரைப்படம், மின்னஞ்சல்

குறுவினா

1. மொழியின் இரு வடிவங்கள் யாவை?
2. பேச்சுமொழி என்றால் என்ன?
3. வட்டாரமொழி எனப்படுவது யாது?

சிறுவினா

1. பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் இடையே உள்ள வேறுபாடுகளுள் நான்கனை விளக்குக.
2. கிளைமொழிகள் எவ்வாறு உருவாகின்றன?

சிந்தனை வினா

இலக்கியங்கள் காலம் கடந்தும் அழியாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்று கருதுகிறீர்கள்?

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 12 22/01/2025 17:35:16

விரிவானம்

இயல் ஒன்று

ஆளுக்கு ஒரு வேலை
(பொம்மலாட்டம்)

நுழையும்முன்

சொலவடைகள் என்பவை சிறுசிறு தொடர்களாக வட்டாரப் பேச்சு வழக்கில் வழங்கி வருபவை. இவை பேச்சுமொழியின் அழகியலையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருக்கும். பொருட்செறிவுமிக்க சொலவடைகளை நாட்டுப்புற மக்களும் தம் பேச்சில் இயல்பாகப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவது தொன்மை வாய்ந்த மொழிகளுக்கே உரிய தனிச்சிறப்பாகும். சொலவடைகளுடன் கூடிய நாட்டுப்புறக் கதை ஒன்றைப் பொம்மலாட்டமாகப் பார்ப்போம்.

கதைசொல்லி : பெரியோர்களே! தாய்மார்களே! குழந்தைகளே! நாம இன்னிக்கு 'ஆளுக்கு ஒரு வேலை' என்னும் கதையைப் பொம்மலாட்டமாப் பாக்கப் போறோம்.

இந்தப் பையன்தான் நம்ம கதைநாயகன். இவன் ஒழுங்காப் பள்ளிக்கூடம் போகாம ஊரைச் சுத்திக்கிட்டு வருவான். அவங்க அம்மா எவ்வளவோ சொல்லியும் அவன் கேட்கல. புண்ணுக்கு மருந்து போட முடியும்; புடிவாதத்துக்கு மருந்து போட முடியுமா? அவனோட புடிவாதத்தை யாராலும் மாத்த முடியல. ஒருநாள் அப்பா பையனக் கூப்பிடுறாரு.

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 13 22/01/2025 17:35:16

அப்பா : அணை உடைஞ்சு போன வெள்ளம் அழுதாலும் வராது. இப்ப நீ சரியா படிக்கலன்னா வாழ்க்கையில முன்னேற முடியாது. ஒழுங்காப் பள்ளிக்கூடம் போயி படிக்கிற வேலையைப் பாரு.

பையன் : படிக்கிறதெல்லாம் எனக்குப் பிடிக்காது.

கதைசொல்லி : வெளைச்சலுக்கும் வெள்ளாட்டுக்கும் சென்மப் பகைங்கிற மாதிரி இந்தப் பயகிட்ட போராடித்தான் படிக்க வைக்கணும். எறும்பு ஊரக் கல்லும் தேயுங்கிற மாதிரி இவனைக் கொஞ்சம் கொஞ்சமா மாத்தணும்னு நினைக்குறாரு அவங்க அப்பா. பொறுமையா அறிவுரை சொல்றாரு. ஆனா பையன் கேக்கல.

பையன் : போப்பா, பள்ளிக்கூடம் போறதெல்லாம் எனக்கு ஒத்து வராது.

கதைசொல்லி : அப்பாவுக்குக் கோபம் வருது. சத்தம் போடுறாரு. சத்தம் கேட்டு அம்மா வெளியே வராங்க.

அம்மா : ராசா, உழைக்கிற மாடுதான் ஊருக்குள்ள விலைபோகும். நீ படிக்கலன்னா ஊர்ல யாரும் மதிக்கமாட்டாங்க. அதனால நீ பள்ளிக்கூடம் போயி நல்லாப் படிச்சுக்க.

கதைசொல்லி : அடை மழை விட்டாலும் செடி மழை விடாதுங்கிற மாதிரி அப்பா விட்டாலும் அம்மா விடமாட்டாங்க போல இருக்குன்னு நெனச்சுப் பையன் பள்ளிக்கூடத்துக்குப் போறான். அவனுக்குப் படிக்கப் பிடிக்கல. நினைச்சதாம் கழுதை எடுத்ததாம் ஓட்டமுங்கிற மாதிரிப் பள்ளிக்கூடத்தை விட்டு ஓட்டம் பிடிக்குறான். விளையாட யாராவது கிடைப்பாங்களான்னு பார்க்குறான். அங்கே எறும்பு ஒண்ணு போய்கிட்டு இருக்கு.

பையன் : எறும்பே! எறும்பே! என் கூட விளையாட வர்றியா?

எறும்பு : போ! போ! உனக்குத்தான் வேலை இல்ல. குடல் கூழுக்கு அழுவுதாம், கொண்டை பூவுக்கு அழுவுதாம். எனக்கு நெறைய வேல கிடக்கு. நான் எங்குழந்தைகளுக்குத் தீனி கொடுக்கணும். அரிசி, நொய் எல்லாம் சேகரிக்கணும். சொப்பனத்தில் கண்ட அரிசி சோத்துக்கு ஆகுமா? நான் கிளம்புறேன். நீ அதோ பறக்குதே அந்தத் தேனீகூடப் போய் விளையாடு.

பையன் : தேனீ! தேனீ! நீ என் கூட விளையாட வர்றியா?

தேனீ : நல்ல பாம்பு படம் எடுக்கலாம்; நாக்கலாம் பூச்சி படம் எடுக்கலாமா? உனக்குத்தான் வேலை இல்லை. ஆயிரம் கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சி போதும். உன்னைப் போல ஒரு ஆளு இருந்தா எங்க கூட்டமே கெட்டுப் போயிடும். எனக்குத் தேன் எடுக்குற வேலை இருக்கு. போ! போ!

பையன் : உங்க கூட்டத்தில ஆயிரம் தேனீ இருக்கே, நீ ஒரு ஆளு தேன் எடுக்கலன்னா என்ன கொறைஞ்சா போயிடும்?

தேனீ : ஆள் கூடுனா பாம்பு சாகுமா? கைய ஊனித்தான் கரணம் போட முடியும். பூவெல்லாம் குறுகி மூடுறதுக்குள்ள நான் தேனெடுக்கப் போகணும்.

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 14 22/01/2025 17:35:16

கதைசொல்லி : தேனீயும் போயிடுது. பையன் கொஞ்சம் தூரம் நடக்குறான். ஒரு வீட்டு வாசலில் பொதிமாடு ஒண்ணு நின்னுக்கிட்டு இருக்கு.

பையன் : மாடே! மாடே! சும்மாதானே இருக்கே. ஏங்கூட விளையாட வாரியா?

மாடு: என்னது! சும்மா இருக்கிறேனா? காவடிப்பாரம் சுமக்கிறவனுக்குத்தான் தெரியும். இப்போ உனக்குத்தான் வேலை இல்லை. இருப்பவனுக்குப் புளியேப்பம்; இல்லாதவனுக்குப் பசியேப்பம். நான் என் முதலாளிக்கு உப்புமூட்டை, புளிமூட்டை எல்லாம் சுமக்கணும். நான் வரல. நீ அதோ அந்த ஆமைகிட்ட போய் விளையாடு.

பையன் : ஆமையே! ஆமையே! நாலு வீட்டில கல்யாணமாம். நாய்க்கு அங்கேயும் இங்கேயும் ஓட்டமாம் என்கிற மாதிரி எங்கே வேகமாகப் போயிட்டு இருக்கே? ஏங்கூட விளையாட வாரியா?

ஆமை: என்னைவிட வேகமாக ஓடுற முயலோட போட்டி வச்சிருக்கேன். அவப்பொழுது போக்குவதிலும் (வீணாகப் பொழுதுபோக்குதல்) தவப்பொழுது நல்லதும்பாங்க. நான் கொஞ்ச நேரம்கூட வீணாக்காமல் நடந்தே ஆகணும்.

பையன் : பாடிப்பாடிக் குத்தினாலும் பதரு அரிசி ஆகுமா? நீ ஓடி ஓடிப் பார்த்தாலும் முயலை முந்த முடியுமா?

ஆமை : அதிர அடிச்சா உதிர விளையும். அது மாதிரி முயற்சி செஞ்சா எல்லாம் முடியும். நீ வேணும்னா அதோ அங்கே படுத்திருக்கிற முயல்கூடப் போய் விளையாடு.

கதைசொல்லி : பையன் கொஞ்ச தூரத்தில் படுத்திருக்கிற முயல் கிட்டப் போறான்.

பையன் : முயலே! முயலே! குத்துக்கல்லுக்கு என்ன குளிரா வெயிலாங்கிற மாதிரி கவலையே இல்லாமப் படுத்திருக்கியே, வா விளையாடலாம்.

முயல் : அகழியில் விழுந்த முதலைக்கு அதுவே சொர்க்கம்னு சொல்லுற மாதிரி, நிழலில் படுத்துத் தூங்கினதால போன தடவை ஆமையிடம் தோத்துப்போய்ட்டேன். இந்தத் தடவையாவது நான் முந்தி ஆகணும். அதனால நான் வேகமா ஓடணும். நீ வேணும்னா அதோ அங்கே இருக்குற குட்டிச்சுவருகூடப் போய் விளையாடு.



கதைசொல்லி : அந்தப் பையன் கார்த்திகை மாசம் பிறைய கண்ட மாதிரி விளையாட ஆள் கிடைச்சிடுச்சுனு நினைச்சு அந்தக் குட்டிச்சுவரு மேலே ஏறிக் குதிச்சுக் குதிச்சு விளையாடுறான். அது ரொம்பப் பழைய சுவரு. மழையிலவேற நல்லா ஊறி இருக்கு. இவன்

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 15 22/01/2025 17:35:16

ஏறிக் குதிச்சதும் பொல பொலன்னு இடிஞ்சு விழுது. அதுல இருந்த பூச்சி, எறும்பு, வண்டு எல்லாம் வெளியில வருது.

எறும்பு : அடப்பாவி, நாங்களே அதை விட்டாலும் கதி இல்ல, அப்பால போனாலும் விதி இல்லனு நினைச்சு தட்டிப் போட்ட ரொட்டிக்குப் புரட்டிப் போட ஆளு இல்லாம இருக்கோம். உனக்குத்தான் வேலை இல்லைன்னா நாங்க பாடுபட்டுச் சேர்த்து வச்ச பொருளை எல்லாம் இப்படிப் போட்டு உடைச்சிட்டியே!

கதைசொல்லி : எறும்பு, பூச்சி எல்லாம் கோபத்தோட அவன் கையில காலுல ஏறி நறுக்கு நறுக்குன்னு கடிக்குதுக. அள்ளுறவன் பக்கத்துல இருந்தாலும் கிள்ளுறவன் பக்கத்துல இருக்கக் கூடாதுன்னு அந்தப் பையன் வலி பொறுக்க முடியாம கத்திக்கிட்டு ஓடுறான். அமாவாசை இருட்டில் பெருச்சாளிக்குப் போன இடமெல்லாம் வழிதான் என்கிற மாதிரி காட்டுலயும் மேட்டுலயும் ஏறி விழுந்து வீட்டுக்கு ஓடி வந்து சேருறான்.

பையன் : அம்மா! அம்மா! ஊரு உலகத்துல எல்லாரும் அவங்க அவங்க வேலையப் பாக்குறாங்க. ஈ எறும்புகூடச் சும்மா இல்லாம வேலை செய்யுதுக. எனக்கு இப்பத்தான் புத்தி வந்தது. என்னோட வேல படிக்கிறதுன்னு எனக்குப் புரிஞ்சிடுச்சு. இனிமே நானும் சும்மா இருக்காம, ஒழுங்காப் பள்ளிக்கூடம் போயிப் படிப்பேன்.

கதைசொல்லி : அதுக்குப் பிறகு அந்தப் பையன் நல்லபடியா படிக்கத் தொடங்கறான். ஆளுக்கு ஒரு வேலைன்னு எல்லாருக்கும் புரியவைக்கிறான். இத்தோட கதை முடியுது. இதுவரைக்கும் பொறுமையா இருந்து பொம்மலாட்டத்தைப் பார்த்த உங்கள் எல்லாருக்கும் நன்றி... நன்றி... நன்றி!

கற்பவை கற்றபின்

1. உங்கள் பகுதியில் வழங்கி வரும் சொலவடைகளைத் தொகுத்து வருக.
2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள சொலவடைகளில் எவையேனும் ஐந்தனைத் தேர்ந்தெடுத்துச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

   (எ.கா.) குத்துக்கல்லுக்குக் குளிரா வெயிலா என்பதுபோல் என் நண்பன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் வாழ்ந்து வந்தான்.

மதிப்பீடு

பாடப்பகுதிப் பொம்மலாட்டக் காட்சிகளைச் சிறுகதையாக எழுதுக.

கற்கண்டு

இயல் ஒன்று

குற்றியலுகரம், குற்றியலிகரம்

நினைவு கூர்க

தமிழ் எழுத்துகளை முதலெழுத்து, சார்பெழுத்து என இரு வகையாகப் பிரிப்பர். உயிர் பன்னிரண்டு, மெய் பதினெட்டு ஆகிய முப்பது எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும். சார்பெழுத்து பத்து வகைப்படும். அவை உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றியலிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் என்பனவாகும். சார்பெழுத்துகளில் ஒன்றான குற்றியலுகரம் பற்றி இனிக் காண்போம்.

குற்றியலுகரம்

குழந்தை, வகுப்பு, பாக்கு ஆகிய சொற்களைச் சொல்லிப் பாருங்கள். மூன்று சொற்களிலும் 'கு' என்னும் எழுத்தை உச்சரிப்பதில் வேறுபாடு இருப்பதை உணரலாம். அவ்வெழுத்து சொல்லின் முதலிலும் இடையிலும் வரும்பொழுது முழுமையாக ஒலிக்கிறது. சொல்லின் இறுதியில் வரும்பொழுது ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கிறது. கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறு வல்லின உகரங்களும் சொல்லின் இறுதியில் வரும்போது, ஒரு மாத்திரைக்குப் பதிலாக அரை மாத்திரை அளவே ஒலிக்கும். இவ்வாறு தனக்குரிய ஓசையில் குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். குறுமை + இயல் + உகரம் = குற்றியலுகரம்.

(எ.கா.) காசு, எஃகு, பயறு, பாட்டு, பந்து, சால்பு

தனிக்குறில் எழுத்தை அடுத்து வரும் வல்லின உகரங்கள் ஒரு மாத்திரை அளவுக்கு முழுமையாக ஒலிக்கும். வல்லினம் அல்லாத உகரங்கள் எப்போதும் முழுமையாகவே ஒலிக்கும். இவ்வாறு ஓசை குறையாமல் ஒரு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதை முற்றியலுகரம் என்பர்.

(எ.கா.) புகு, பசு, விடு, அது, வறு, மாவு, ஏழு

தெரிந்து தெளிவோம்

தமிழில் எழுத்துகளைக் குறிப்பிடுவதற்கு கரம், கான், காரம், கேனம் ஆகிய எழுத்துச் சாரியைகளைப் பயன்படுத்துகிறோம்.

- குறில் எழுத்துகளைக் குறிக்க 'கரம்', 'காரம்', 'கான்' (எ.கா.) அகரம், மகரம், மகாரம், மஃகான்
- ஐ, ஔ எழுத்துகளைக் குறிக்க 'கான்' (எ.கா.) ஐகான், ஔகான்
- நெடில் எழுத்துகளைக் குறிக்க 'காரம்' (எ.கா.) ஆகாரம், ஏகாரம், ஐகாரம், ஔகாரம்
- ஆய்த எழுத்தைக் குறிக்க 'கேனம்' (எ.கா.) அஃகேனம்

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 17 22/01/2025 17:35:16

குற்றியலுகரத்தின் வகைகள்

குற்றியலுகரம் தனக்கு முன் உள்ள எழுத்தைக் கொண்டு ஆறு வகையாகப் பிரிக்கப்படும்.

1. நெடில்தொடர்க் குற்றியலுகரம்

தனி நெடிலைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'நெடில் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும். இவை ஈரெழுத்துச் சொற்களாக மட்டும் அமையும்.

(எ.கா.) பாகு, மாசு, பாடு, காது, ஆறு .

2. ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்

ஆய்த எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா.) எஃகு, அஃது

3. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

தனிநெடில் அல்லாத உயிர்மெய் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா.)	அரசு	(ர = ர் + அ)	கயிறு	(யி = ய் + இ)
	ஒன்பது	(ப = ப் + அ)	வரலாறு	(லா = ல் + ஆ)

4. வன்தொடர்க் குற்றியலுகரம்

வல்லின (க், ச், ட், த், ப், ற்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'வன்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா) பாக்கு, பேச்சு, பாட்டு, பத்து, உப்பு, பற்று

5. மென்தொடர்க் குற்றியலுகரம்

மெல்லின (ங், ஞ், ண், ந், ம், ன்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'மென்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா.) பங்கு, மஞ்சு, வண்டு, பந்து, அம்பு, கன்று

6. இடைத்தொடர்க் குற்றியலுகரம்

இடையின (ய், ர், ல், வ், ழ், ள்) மெய் எழுத்துகளைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் 'இடைத்தொடர்க் குற்றியலுகரம்' எனப்படும்.

(எ.கா.) எய்து, மார்பு, சால்பு, மூழ்கு

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 18 22/01/2025 17:35:17

தெரிந்து தெளிவோம்

'வ்' என்னும் எழுத்தைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரச் சொற்கள் இல்லை.

மேலும், சு, டு, று ஆகியவை இறுதியாக அமையும் இடைத்தொடர் குற்றியலுகரச் சொற்களும் இல்லை.

குற்றியலிகரம்

வரகு+யாது - இந்த இரு சொற்களையும் சேர்த்து விரைவாக ஒலித்துப் பாருங்கள். வரகியாது என ஒலிப்பதை அறியலாம். முதல் சொல்லின் இறுதியில் உள்ள 'கு' என்னும் எழுத்து 'கி' என்று ஒலிக்கிறது. அதுவும் முழுமையாக ஒரு மாத்திரை அளவில் ஒலிக்காமல் அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு தனது ஒரு மாத்திரை அளவில் குறுகி ஒலிக்கும் இகரம் 'குற்றியலிகரம்' எனப்படும். குறுமை + இயல் + இகரம் = குற்றியலிகரம்.

குற்றியலிகரம் இரண்டு இடங்களில் மட்டும் வரும்.

இடம் – 1

குற்றியலுகரச் சொற்களைத் தொடர்ந்து யகரத்தை முதல் எழுத்தாகக் கொண்ட சொற்கள் வரும்போது குற்றியலுகரத்தில் உள்ள உகரம் இகரமாக மாறும். அந்த இகரம் தனக்குரிய ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும்.

(எ.கா.) கொக்கு + யாது = கொக்கியாது   தோப்பு + யாது = தோப்பியாது
(க் + உ)   (க் + இ)   (ப் + உ)   (ப் + இ)

நாடு + யாது = நாடியாது   எனப்படுவது + யாது = எனப்படுவதியாது
(ட் + உ)   (ட் + இ)   (த் + உ)   (த் + இ)

இடம் – 2

'மியா' என்பது ஓர் அசைச்சொல் (ஓசை நயத்திற்காக வருவது). இதில் 'மி' யில் (மி = ம் + இ) உள்ள இகரம் குற்றியலிகரம் ஆகும். இது சொற்களில் இடம்பெறும்போது தனக்குரிய மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கும்.

(எ.கா.) கேள் + மியா = கேண்மியா

செல் + மியா = சென்மியா

குற்றியலிகரம் தற்போது உரைநடை வழக்கில் இல்லை; இலக்கியங்களில் மட்டுமே உள்ளது.

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 19   22/01/2025 17:35:17

கற்பவை கற்றபின்

1. ஒன்று முதல் பத்து வரையுள்ள எண்ணுப் பெயர்களைப் பட்டியலிட்டு எழுதுங்கள்; அவற்றில் குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதுங்கள்.

2. குற்றியலுகர எண்ணுப் பெயர்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

3. குற்றியலுகர எண்ணுப் பெயர்களின் மாத்திரை அளவைக் கண்டுபிடியுங்கள்.

   (எ.கா.) ஒன்று – $1 + \frac{1}{2} + \frac{1}{2} = 2$

4. கு, சு, டு, து, று ஆகிய குற்றியலுகரத்தை இறுதியாகக் கொண்ட ஈரெழுத்துச் சொற்களைத் திரட்டுக.

மதிப்பீடு

கீழ்க்காணும் சொற்களைக் குற்றியலுகர வகையின் அடிப்படையில் வகைப்படுத்துக.

ஆறு, எஃகு, கரும்பு, விறகு, உழக்கு, எட்டு, ஏடு, பந்து, காசு, கொய்து

நெடில்தொடர்	ஆய்தத்தொடர்	உயிர்த்தொடர்	வன்தொடர்	மென்தொடர்	இடைத்தொடர்

பொருந்தாத சொற்களை எடுத்து எழுதுக.

1. பசு, விடு, ஆறு, கரு – ___________________
2. பாக்கு, பஞ்சு, பாட்டு, பத்து – ___________________
3. ஆறு, மாசு, பாகு, அது – ___________________
4. அரசு, எய்து, மூழ்கு, மார்பு – ___________________
5. பண்பு, மஞ்சு, கண்டு, எஃகு – ___________________

குறுவினா

1. 'குற்றியலுகரம்' என்னும் சொல்லைப் பிரித்து விளக்கம் தருக.
2. குற்றியலிகரம் என்றால் என்ன?

மொழியை ஆள்வோம்!

கேட்க.

தமிழின் சிறப்பைப் பற்றிய அறிஞர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்பில் இரண்டு நிமிடம் பேசுக.

நான் அறிந்த பழமொழிகள்.

அறிந்து பயன்படுத்துவோம்

கட்டுரை எழுதுதல்

ஏதேனும் ஒரு பொருள் பற்றிய தகவல்களைத் திரட்டி, அவற்றை வகைப்படுத்தி, உட்தலைப்புகளுடன் எழுதுவது கட்டுரையாகும். கட்டுரை பொதுவாக மூன்று பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். அவை முன்னுரை, பொருளுரை, முடிவுரை ஆகியனவாகும்.

கட்டுரையின் முதல் பகுதி முன்னுரை ஆகும். இது கட்டுரையின் பொருளைப் பற்றிய அறிமுகமாக அமையும்.

கட்டுரையின் இரண்டாம் பகுதி பொருளுரை ஆகும். கட்டுரையின் தலைப்புக்குப் பொருத்தமான செய்திகள் இங்கு வகைப்படுத்தி எழுதப்படும். இது சில பத்திகளாகப் பிரித்து எழுதப்பட வேண்டும். தேவைக்கேற்ப ஒவ்வொரு பத்திக்கும் தனித்தனி உட்தலைப்பு இட்டும் எழுதுவர்; உட்தலைப்பு இன்றியும் எழுதுவர். பொருளுரையில் பழமொழிகள், பொன்மொழிகள், மேற்கோள்கள் போன்றவை இடம்பெறுவது கட்டுரைக்குச் சிறப்பைக் கொடுக்கும்.

கட்டுரையின் இறுதிப் பகுதி முடிவுரை ஆகும். இதில் கட்டுரையில் கூறப்பட்டுள்ள செய்திகளைப் பற்றிய முடிவான கருத்து இடம்பெறும்.

கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

தாய்மொழிப் பற்று

முன்னுரை
மொழி பற்றிய விளக்கம்
தாய்மொழி
தாய்மொழிப் பற்று
தாய்மொழிப் பற்றுக் கொண்ட சான்றோர்
நமது கடமை
முடிவுரை

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 21
22/01/2025 17:35:17

மொழியோடு விளையாடு

தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

(எ.கா.) இருதிணை : உயர்திணை, அஃறிணை

முக்கனி, முத்தமிழ், நாற்றிசை, ஐந்திணை, அறுசுவை.

இரு பொருள் கொண்ட ஒரு சொல்லால் நிரப்புக.

(எ.கா.) அரசுக்குத் தவறாமல் வரி செலுத்த வேண்டும்.

ஏட்டில் எழுதுவது வரி வடிவம்.

1. மழலை பேசும் ____________ அழகு.
   இனிமைத் தமிழ் ____________ எமது.
2. அன்னை தந்தையின் கைப்பிடித்துக் குழந்தை ________ பழகும்.
   அறிஞர் அண்ணாவின் சிறப்பு அவரது அடுக்குமொழி ________.
3. நீ அறிந்ததைப் பிறருக்குச் ______________.
   எழுத்துகள் தொடர்ந்துநின்று பொருள் தருவது __________.
4. உழவர்கள் நாற்று ____________ வயலுக்குச் செல்வர்.
   குழந்தையை மெதுவாக ____________ என்போம்.

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. கடிதங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுதும்போது திருத்தமான மொழி நடையையே கையாள்வேன்.
2. பொம்மலாட்டம், தெருக்கூத்து போன்ற நாட்டுப்புறக் கலைகளைப் போற்றுவேன்.

படிப்போம்; பயன்படுத்துவோம்!

ஊடகம்	- *Media*	பருவ இதழ்	- *Periodical*
மொழியியல்	- *Linguistics*	பொம்மலாட்டம்	- *Puppetry*
ஒலியியல்	- *Phonology*	எழுத்திலக்கணம்	- *Orthography*
இதழியல்	- *Journalism*	உரையாடல்	- *Dialogue*

7th Std - Tamil_2025_Term_I_Unit 1.indd 22 22/01/2025 17:35:17

இயல்
இரண்டு

அணிநிழல் காடு

கற்றல் நோக்கங்கள்

- செய்யுளின் வருணனைப் பகுதிகளைப் படித்துச் சுவைத்தல்
- புதுக்கவிதை வாயிலாக மனித உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல்
- தமிழர்களின் கப்பல் கட்டும் தொழில்நுட்ப முறையை இலக்கியங்கள் வழி அறிந்து வியத்தல்
- காட்டு உயிர்களுக்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பைப் புரிந்துகொள்ளுதல்
- எழுத்துகள் குறுகி ஒலிக்கும் இடங்களை அறிந்து பயன்படுத்துதல்

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 23 22/01/2025 17:36:18

கவிதைப்பேழை

இயல் இரண்டு

காடு

நுழையும்முன்

காடும் கடலும் நமக்கு எப்போதும் காட்சிக்கு இன்பம் தருபவை. ஒரு நாட்டின் வளம், அந்நாட்டின் மொத்த நிலப்பரப்பில் அமைந்துள்ள காடுகளின் அளவைப் பொறுத்தே மதிப்பிடப்படுகிறது. அதனால்தான் 'காட்டின் வளமே நாட்டின் வளம்' என்று அறிஞர்கள் கூறுகின்றனர். காட்டையும் காட்டின் குளிர்ச்சியையும் காட்டு விலங்குகளின் கொண்டாட்டங்களையும் கவிதை வழி அறிவோம்.

கார்த்திகை தீபமெனக்
காடெல்லாம் பூத்திருக்கும்
பார்த்திட வேண்டுமடீ – கிளியே
பார்வை குளிருமடீ!

காடு பொருள்கொடுக்கும்
காய்கனி ஈன்றெடுக்கும்
கூடிக் களித்திடவே – கிளியே
குளிர்ந்த நிழல்கொடுக்கும்

குரங்கு குடியிருக்கும்
கொம்பில் கனிபறிக்கும்
மரங்கள் வெயில்மறைக்கும் – கிளியே
வழியில் தடையிருக்கும்

**பச்சை மயில்நடிக்கும்*
பன்றி கிழங்கெடுக்கும்
நச்சர வங்கலங்கும் – கிளியே
நரியெலாம் ஊளையிடும்

அதிமது ரத்தழையை
யானைகள் தின்றபடி
புதுநடை போடுமடீ – கிளியே
பூங்குயில் கூவுமடீ!

சிங்கம் புலிகரடி
சிறுத்தை விலங்கினங்கள்
எங்கும் திரியுமடீ – கிளியே
*இயற்கை விடுதியிலே!**

– சுரதா

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 24 22/01/2025 17:36:18

சொல்லும் பொருளும்

ஈன்று	–	தந்து	களித்திட	–	மகிழ்ந்திட
கொம்பு	–	கிளை	நச்சரவம்	–	விடமுள்ள பாம்பு
அதிமதுரம்	–	மிகுந்த சுவை	விடுதி	–	தங்கும் இடம்

பாடலின் பொருள்

கார்த்திகை விளக்குகள் போலக் காடு முழுவதும் மலர்கள் மலர்ந்திருக்கும். அவற்றைக் காணும் கண்கள் குளிர்ச்சி பெறும். காடு பல வகையான பொருள்களைத் தரும். காய்கனிகளையும் தரும். எல்லாரும் கூடி மகிழ்ந்திடக் குளிர்ந்த நிழல் தரும். அங்கே வசிக்கும் குரங்குகள் மரக்கிளைகளில் உள்ள கனிகளைப் பறித்து உண்ணும். மரங்கள் வெயிலை மறைத்து நிழல் தரும். அடர்ந்த காடு வழிச்செல்வோர்க்குத் தடையாய் இருக்கும்.

பச்சை நிறம் உடைய மயில்கள் நடனமாடும். பன்றிகள் காட்டில் உள்ள கிழங்குகளைத் தோண்டி உண்ணும். அதனைக்கண்டு நஞ்சினை உடைய பாம்புகள் கலக்கமடையும். நரிக் கூட்டம் ஊளையிடும். மிகுந்த சுவையுடைய தழையை யானைகள் தின்றபடி புதிய நடை போடும். பூக்கள் பூத்துக் குலுங்கும் மரங்களில் குயில்கள் கூவும். இயற்கைத் தங்குமிடமாகிய காட்டில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை போன்ற விலங்கினங்கள் எங்கும் அலைந்து திரியும்.

எதுகை – கார்த்திகை – பார்த்திட, குரங்கு – மரங்கள்

மோனை – கார்த்திகை – காடெல்லாம், பார்த்திட – பார்வை

இயைபு – பொருள்கொடுக்கும் – ஈன்றெடுக்கும், குடியிருக்கும் – கனிபறிக்கும்

நூல் வெளி

கவிஞர் சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் பாரதிதாசன் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். பாரதிதாசனின் இயற்பெயர் 'சுப்புரத்தினம்'. எனவே, தம் பெயரைச் சுப்புரத்தின தாசன் என்று மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா என்பதாகும். உவமைகளைப் பயன்படுத்திக் கவிதைகள் எழுதுவதில் வல்லவர் என்பதால் இவரை உவமைக் கவிஞர் என்றும் அழைப்பர். அமுதும் தேனும், தேன்மழை, துறைமுகம் உள்ளிட்ட பல நூல்களை இவர் இயற்றியுள்ளார்.

இப்பாடல் தேன்மழை என்னும் நூலில் இயற்கை எழில் என்னும் பகுதியிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளது.

இப்பாடல் கிளிக்கண்ணி என்னும் பாவகையைச் சேர்ந்தது. கிளியின் மொழி போன்ற இனிய சொற்களைப் பேசும் பெண்ணை நோக்கிக் கூறுவதாக இனிய சந்தத்தில் பாடப்படும் இசைப்பாடல் வகை 'கிளிக்கண்ணி' ஆகும்.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 25 22/01/2025 17:36:19

கற்பவை கற்றபின்

1. காடு என்னும் தலைப்பில் அமைந்த 'கிளிக்கண்ணிப்' பாடலை இசையுடன் பாடி மகிழ்க.
2. பின்வரும் கிளிக்கண்ணிப் பாடலைப் பாடி மகிழ்க.

நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரடீ! – கிளியே
வாய்ச்சொல்லில் வீரரடி.
கூட்டத்தில் கூடிநின்று
கூவிப் பிதற்றலன்றி
நாட்டத்தில் கொள்ளாரடீ! – கிளியே
நாளில் மறப்பாரடீ.

– பாரதியார்

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வாழை, கன்றை _ _ _ _ _ _ _ _ _.

அ) ஈன்றது　ஆ) வழங்கியது　இ) கொடுத்தது　ஈ) தந்தது

2. 'காடெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _ _ _ _.

அ) காடு + டெல்லாம்　ஆ) காடு + எல்லாம்
இ) கா + டெல்லாம்　ஈ) கான் + எல்லாம்

3. 'கிழங்கு + எடுக்கும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _ _ _ _ _ _.

அ) கிழங்குஎடுக்கும்　ஆ) கிழங்கெடுக்கும்
இ) கிழங்குடுக்கும்　ஈ) கிழங்கொடுக்கும்

நயம் அறிக

பாடலிலுள்ள மோனை, எதுகை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

குறுவினா

1. காட்டுப்பூக்களுக்கு எதனை உவமையாகக் கவிஞர் சுரதா குறிப்பிடுகிறார்?
2. காட்டின் பயன்களாகக் கவிஞர் சுரதா கூறுவன யாவை?

சிறுவினா

'காடு' பாடலில் விலங்குகளின் செயல்களாகக் கவிஞர் சுரதா கூறுவனவற்றை எழுதுக.

சிந்தனை வினா

காட்டை இயற்கை விடுதி என்று கவிஞர் சுரதா கூறக் காரணம் என்ன?

கவிதைப்பேழை

இயல் இரண்டு

அப்படியே நிற்கட்டும் அந்த மரம்

நுழையும்முன்

நிலமடந்தைக்கு இயற்கை சூட்டிய மணிமகுடங்களே மரங்கள். அவை மனித வாழ்வியலோடு பின்னிப் பிணைந்தவை. மரங்களைப் பற்றிய நினைவுகள் பெரும்பாலான மனிதர்களின் உள்ளங்களுக்குள் புதைந்து கிடக்கின்றன. கால வெள்ளத்தில் மரங்கள் மறையலாம். அவற்றைப் பற்றிய நினைவுகள் மறையா என்பதை விளக்கும் கவிதை ஒன்றை அறிவோம்.

ஊரின் வடகோடியில் அந்த மரம்
ஐந்து வயதில் பார்த்தபோதும்
இப்படியேதானிருந்தது
ஐம்பதைத் தாண்டி இன்றும்
அப்படியேதான்

தாத்தாவின் தாத்தா காலத்தில்
நட்டு வளர்த்த மரமாம்
அப்பா சொல்லக் கேட்டிருக்கிறேன்

பச்சைக்காய்கள் நிறம் மாறிச்
செங்காய்த் தோற்றம் கொண்டதுமே
சிறுவர் மனங்களில் பரவசம் பொங்கும்

பளபளக்கும் பச்சை இலைகளூடே
கருநீலக் கோலிக்குண்டுகளாய்
நாவற்பழங்கள் கிளைகளில் தொங்கும்
பார்க்கும்போதே நாவில் நீரூறும்

காக்கை குருவி மைனா கிளிகள்
இன்னும் பெயரறியாப் பறவைகளுடன்
அணில்களும் காற்றும் உதிர்த்திடும்
சுட்ட பழங்கள் பொறுக்க
சிறுவர் கூட்டம் அலைமோதும்

வயதுவந்த அக்காக்களுக்காய்
கையில் பெட்டியுடன் ஓடிஓடிப்
பழம் பொறுக்கும் தங்கச்சிகள்

இரவில் மெல்லிய நிலவொளியில்
படையெடுத்து வரும்
பழந்தின்னி வௌவால் கூட்டம்

தோப்பு முழுக்கப் பரவிக்கிடக்கும்
மரத்தின் குளிர்ந்த நிழலிலே
கிளியாந்தட்டின் சுவாரசியம்
புளியமிளாறுடன் அப்பா வரும்வரை

நேற்று மதியம் நண்பர்களுடன்
என் மகன் விளையாடியதும்
அந்த மரத்தின் நிழலில்தானே

பெருவாழ்வு வாழ்ந்த மரம்
நேற்றிரவுப் பேய்க்காற்றில்
வேரோடு சாய்ந்துவிட்டதாமே
விடிந்தும் விடியாததுமாய்
துஷ்டி கேட்கும் பதற்றத்தில்
விரைந்து செல்கிறார் ஊர்மக்கள்
குஞ்சு குளுவான்களோடு

எனக்குப் போக மனமில்லை
என்றும் என்மன வெளியில்
அப்படியே நிற்கட்டும் அந்த மரம்
குன்றுகளின் நடுவே மாமலைபோல

– ராஜமார்த்தாண்டன்

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 27 22/01/2025 17:36:19

சொல்லும் பொருளும்

பரவசம் – மகிழ்ச்சிப் பெருக்கு

கிளியாந்தட்டு – ஒரு வகை விளையாட்டு

துஷ்டி கேட்டல் – துக்கம் விசாரித்தல்

குஞ்சு குளுவான்கள் – சிறுகுழந்தைகள்

நூல் வெளி

ராஜமார்த்தாண்டன் கவிஞர், இதழாளர், கவிதைத் திறனாய்வாளர் எனப் பன்முகத் திறன்கள் பெற்றவர். கொல்லிப்பாவை என்னும் சிற்றிதழை நடத்தியவர். ராஜமார்த்தாண்டன் கவிதைகள் என்னும் நூலுக்காகத் தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசு பெற்றவர். சிறந்த தமிழ்க் கவிதைகளைத் தொகுத்து கொங்குதேர் வாழ்க்கை என்னும் தலைப்பில் நூலாக்கியுள்ளார்.

இவரது அப்படியே நிற்கட்டும் அந்த மரம் என்னும் நூலில் உள்ள கவிதை இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

1. உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள ஏதேனும் ஒரு மரம் குறித்து வருணனையாக ஐந்து தொடர்கள் எழுதுக.
2. உங்கள் பகுதிகளில் உள்ள மரங்களின் பெயர்களைத் தொகுத்து எழுதுக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 28 22/01/2025 17:36:19

3. பின்வரும் புதுக்கவிதைகளைப் படித்துச் சுவைக்க.

- கொப்புகள் விலக்கி
  கொத்துக் கொத்தாய்
  கருவேலங்காய்
  பறித்துப் போடும் மேய்ப்பனை
  ஒருநாளும்
  சிராய்ப்பதில்லை
  கருவமுட்கள்.

- குழந்தை
  வரைந்தது
  பறவைகளை மட்டுமே
  வானம்
  தானாக உருவானது.

– கலாப்ரியா

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நாவற்பழத்திற்கு உவமையாகக் கூறப்படுவது _ _ _ _ _.
   அ) பச்சை இலை ஆ) கோலிக்குண்டு
   இ) பச்சைக்காய் ஈ) செங்காய்
2. 'சுட்ட பழங்கள்' என்று குறிப்பிடப்படுபவை _ _ _ _ _.
   அ) மண் ஒட்டிய பழங்கள் ஆ) சூடான பழங்கள்
   இ) வேகவைத்த பழங்கள் ஈ) சுடப்பட்ட பழங்கள்
3. 'பெயரறியா' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _.
   அ) பெயர + றியா ஆ) பெயர் + றறியா
   இ) பெயர் + அறியா ஈ) பெயர + அறியா
4. 'மனமில்லை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _ _ _ _ _.
   அ) மன + மில்லை ஆ) மனமி + இல்லை
   இ) மனம் + மில்லை ஈ) மனம் + இல்லை
5. நேற்று + இரவு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _ _ _ _ _.
   அ) நேற்றுஇரவு ஆ) நேற்றிரவு
   இ) நேற்றுரவு ஈ) நேற்இரவு

குறுவினா

1. நாவல் மரம் எத்தனை தலைமுறைகளாக அங்கு நின்றிருந்தது?
2. சிறுவர்களுக்கு நாவற்பழம் கிடைக்க உதவியோர் யாவர்?

சிறுவினா

நாவல் மரம் பற்றிய நினைவுகளாகக் கவிஞர் ராஜமார்த்தாண்டன் கூறுவன யாவை?

சிந்தனை வினா

பெருங்காற்றில் வீழ்ந்த மரத்தைக் கவிஞர் ராஜமார்த்தாண்டன் ஏன் பார்க்க விரும்பவில்லை?

உரைநடை உலகம்

இயல் இரண்டு

தமிழரின் கப்பற்கலை

நுழையும்முன்

பயணம் செய்வதில் தமிழர்களுக்கு எப்போதும் பெருவிருப்பம் உண்டு. வானூர்திகள் கண்டுபிடிக்கப்படாத காலத்தில் வெளிநாட்டுப் பயணத்திற்கு உதவியவை கப்பல்களே! கப்பல் கட்டுவதும் கப்பலைச் செலுத்துவதும் மிகச் சிறந்த தொழில்நுட்பம் சார்ந்த கலைகள் ஆகும். கப்பலைப் பார்ப்பதும் கப்பலில் பயணம் செய்வதும் மட்டுமல்லாமல் கப்பலைப் பற்றிப் படிப்பதும் உள்ளத்திற்கு உவகை தரும்.

மழை என்றதும் குழந்தைகளின் நினைவுக்கு வருவது காகிதக் கப்பல். மழை நீரில் காகிதக் கப்பல் விட்டு விளையாடாத குழந்தைகளே இல்லை எனலாம். அந்த அளவிற்கு நம் ஆழ்மனத்தில் கப்பல் இடம் பெற்றுள்ளது. பழங்காலம் முதல் தமிழர்கள் கப்பல் கட்டும் கலையில் சிறந்திருந்ததன் மரபுத் தொடர்ச்சி என்று இதனைக் கூறலாம். தமிழர்கள் கப்பல்களைக் கட்டினர் என்பதற்கும் கப்பல் மூலம் வெளிநாடுகளுக்குச் சென்றனர் என்பதற்கும் நம் இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. நமக்குக் கிடைத்துள்ள நூல்களிலேயே மிகவும் பழமையானது தொல்காப்பியம். அந்நூல் முந்நீர் வழக்கம் என்று கடல்பயணத்தைக் குறிப்பிடுகிறது. எனவே, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழர்கள் கடல் பயணம் செய்துள்ளனர் என்பதை அறியலாம்.

கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து (குறள் 496)

என்னும் திருக்குறள், திருவள்ளுவர் காலத்திலேயே பெரிய கப்பல்கள் இருந்தன என்பதற்குச் சான்றாகும். பூம்புகார் துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் பொருள்கள் ஏற்றுமதியும் இறக்குமதியும் செய்யப்பட்டன என்பதைப் பட்டினப்பாலை விரிவாக விளக்குகிறது.

உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் (பாடல் 255)

என்று பெரிய கப்பலை அகநானூறு குறிப்பிடுகிறது. இதனையே பதிற்றுப்பத்து,

"நீர்மிசை நிவக்கும்
பெருங்கலி வங்கம்" (பாடல் 52)

என்று குறிப்பிடுகிறது. சேந்தன் திவாகரம் என்னும் நிகண்டு நூலில் பலவகையான கப்பல்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலம் தமிழர்கள் கப்பல் கட்டும் தொழிலில் பரந்துபட்ட அறிவு பெற்றிருந்தார்கள் என்பதை உணரலாம்.

தொடக்ககால நீர்வழிப் பயணம்

நீர்நிலைகளில் மரக்கிளைகள் மிதந்து செல்வதையும் அவற்றின்மீது பறவைகள், தவளைகள் முதலியன அமர்ந்து செல்வதையும் பழங்கால மனிதன் கண்டான். நீரில் மிதக்கும் பொருள்களின் மீது தானும் ஏறிப் பயணம் செய்ய முடியும் என அவன் உணர்ந்தான். மிதக்கும் மரக்கட்டைகள் மீது ஏறி அமர்ந்து சிறிய நீர்நிலைகளைக் கடக்கத் தொடங்கினான். மீன்கள் தம் உடலின் இரு பக்கங்களிலும் உள்ள துடுப்புப் போன்ற பகுதிகளைப் பயன்படுத்தித் தண்ணீரைப் பின்னுக்குத் தள்ளி நீந்துவதைக் கண்டான். தானும் மரத்துண்டுகளைத் துடுப்புகளாகப் பயன்படுத்தத் தொடங்கினான். பிறகு மரங்கள் பலவற்றை இணைத்துக் கட்டி அவற்றின் மீது ஏறிப் பயணம் செய்தான். அவையே இன்றுவரை வழக்கத்தில் உள்ள கட்டுமரங்கள் ஆகும். அதன் பின்னர் எடை குறைந்த பெரிய மரங்களின் உட்பகுதியைக் குடைந்து எடுத்துவிட்டுத் தோணியாகப் பயன்படுத்தினான். உட்பகுதி தோண்டப்பட்டவை என்பதால் அவை தோணிகள் எனப்பட்டன.

தமிழர்கள் தோணி, ஓடம், படகு, புணை, மிதவை, தெப்பம் போன்றவற்றைச் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தினர். கலம், வங்கம், நாவாய் முதலியவை அளவில் பெரியவை. இவற்றைக் கொண்டு தமிழர்கள் கடல் பயணம் மேற்கொண்டனர்.

கப்பல் கட்டும் கலை

தமிழர்கள் முற்காலத்திலேயே கப்பல் கட்டும் கலையை நன்கு அறிந்திருந்தனர். கப்பல் கட்டும் கலைஞர்கள் கம்மியர் என்று அழைக்கப்பட்டனர். இதனைக்,

"கலஞ்செய் கம்மியர் வருகெனக் கூஉய்" (காதை 25, அடி 124)

என்னும் மணிமேகலை அடியால் அறியலாம். பெருந்திரளான மக்களையும் பொருள்களையும் ஏற்றிச் செல்லும் வகையில் பெரிய கப்பல்களைத் தமிழர் உருவாக்கினர். நீண்ட தூரம் கடலிலேயே செல்ல வேண்டி இருந்ததால் கப்பல்களைப் பாதுகாப்பானவையாகவும் வலிமை மிக்கவையாகவும் உருவாக்கினர்.

கப்பல் கட்டுவதற்கு உரிய மரங்களைத் தேர்ந்தெடுப்பதில் தமிழர்கள் மிகுந்த கவனம் செலுத்தினர். கப்பல்கள் எப்போதும் தண்ணீரிலேயே இருப்பவை என்பதால் தண்ணீரால் பாதிப்பு அடையாத மரங்களையே கப்பல் கட்டப் பயன்படுத்தினர். நீர்மட்ட வைப்பிற்கு வேம்பு, இலுப்பை, புன்னை, நாவல் போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். பக்கங்களுக்குத் தேக்கு, வெண்தேக்கு போன்ற மரங்களைப் பயன்படுத்தினர். மேலும், சுழி உள்ள மரங்களைப் பயன்படுத்தாமல் தவிர்த்தனர்.

நீளம், அகலம், உயரம் ஆகியவற்றைச் சரியான முறையில் கணக்கிட்டுக் கப்பல்களை உருவாக்கினர். இவற்றைத் தச்சுமுழம் என்னும் நீட்டல் அளவையால் கணக்கிட்டனர். பெரிய படகுகளில் முன்பக்கத்தை யானை, குதிரை, அன்னம் முதலியவற்றின் தலையைப் போன்று வடிவமைப்பதும் உண்டு. கரிமுக அம்பி, பரிமுக அம்பி என்றெல்லாம் இவை அழைக்கப்பட்டன.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 31 22/01/2025 17:36:20

தெரிந்து தெளிவோம்

நியூசிலாந்து நாட்டு வெலிங்டன் அருங்காட்சியகத்தில் பழங்காலத் தமிழ்நாட்டுக் கப்பல்களில் பயன்படுத்தப்பட்ட மணி ஒன்று இடம்பெற்றுள்ளது. தமிழர்கள் அயல் நாடுகளுக்குக் கப்பல்களில் சென்றனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். பிற்காலச் சோழர்களில் இராசராச சோழனும், இராசேந்திர சோழனும் பெரிய கப்பற்படையைக் கொண்டு பல நாடுகளை வென்றனர் என்பதை வரலாறு பகர்கிறது.

மரங்களையும் பலகைகளையும் ஒன்றோடு ஒன்று இணைக்கும்போது அவற்றுக்கு இடையே தேங்காய் நார், பஞ்சு ஆகியவற்றில் ஒன்றை வைத்து நன்றாக இறுக்கி ஆணிகளை அறைந்தனர். சுண்ணாம்பையும் சணலையும் கலந்து அரைத்து அதில் எண்ணெய் கலந்து கப்பலின் அடிப்பகுதியில் பூசினர். இதனால் கப்பல்கள் பழுதடையாமல் நெடுங்காலம் உழைத்தன. இம்முறையை இத்தாலி நாட்டைச் சேர்ந்த மார்க்கோ போலோ என்னும் கடற்பயணி வியந்து பாராட்டியுள்ளார். இரும்பு ஆணிகள் துருப்பிடித்துவிடும் என்பதால் மரத்தினாலான ஆணிகளையே பயன்படுத்தினர்.

பாய்மரக் கப்பல்கள்

காற்றின் உதவியால் செலுத்தப்படும் கப்பல்கள் பாய்மரக் கப்பல்கள் எனப்பட்டன. பலவகையான பாய்மரங்களைத் தமிழர் பயன்படுத்தினர். பாய்மரங்களைக் கட்டும் கயிறுகளும் பல வகையாக இருந்தன. பாய்மரக் கப்பலின் பாய், கயிறு ஆகியவற்றில் பழுது ஏற்படும் பொழுது அவற்றை மரப்பிசின் கொண்டு இணைத்தனர் என்று பரிபாடல் கூறுகிறது.

கப்பலின் உறுப்புகள்

கப்பல் பல்வேறு வகையான உறுப்புகளை உடையது. எரா, பருமல், வங்கு, கூம்பு, பாய்மரம், சுக்கான், நங்கூரம் போன்றவை கப்பலின் உறுப்புகளுள் சிலவாகும். கப்பலின் முதன்மையான உறுப்பாகிய அடிமரம் எரா எனப்படும். குறுக்கு மரத்தைப் பருமல் என்பர். கப்பலைச் செலுத்துவதற்கும் உரிய திசையில் திருப்புவதற்கும் பயன்படும் முதன்மையான கருவி சுக்கான் எனப்படும். கப்பலை நிலையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்க உதவும் உறுப்பு நங்கூரம் ஆகும். சமுக்கு என்னும் ஒரு கருவியையும் கப்பல்களில் பயன்படுத்தினர் என்று கப்பல் சாத்திரம் என்னும் நூல் குறிப்பிடுகிறது. இது காந்த ஊசி பொருத்தப்பட்ட திசைகாட்டும் கருவியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தெரிந்து தெளிவோம்

"ஆங்கிலேயர் கட்டிய கப்பல்களைப் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுது பார்க்க வேண்டும். ஆனால், தமிழர் கட்டிய கப்பல்களை ஐம்பது ஆண்டுகள் ஆனாலும் பழுது பார்க்க வேண்டிய அவசியமில்லை" என்று வாக்கர் என்னும் ஆங்கிலேயர் கூறியுள்ளார்.

கப்பலைச் செலுத்தும் முறை

கப்பல் செலுத்துபவரை மாலுமி, மீகாமன், நீகான், கப்பலோட்டி முதலிய பல பெயர்களால் அழைப்பர். காற்றின் திசையை அறிந்து கப்பல்களைச் செலுத்தும் முறையைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர். இவ்வுண்மையை,

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 32 22/01/2025 17:36:20

"நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக" (பாடல் 66)

என்னும் புறப்பாடல் அடிகளில் வெண்ணிக்குயத்தியார் குறிப்பிடுகிறார். கடலில் காற்று வீசும் திசை, கடல் நீரோட்டங்களின் திசை ஆகியவற்றைத் தமிழர்கள் தம் பட்டறிவால் நன்கு அறிந்து அவற்றுக்கேற்ப உரிய காலத்தில் சரியான திசையில் கப்பலைச் செலுத்தினர். திசைகாட்டும் கருவியைப் பயன்படுத்தியும் வானில் தோன்றும் விண்மீன்களின் நிலையை வைத்தும் திசையை அறிந்து கப்பலைச் செலுத்தினர். கப்பல் ஓட்டும் மாலுமிகள் சிறந்த வானியல் அறிவையும் பெற்றிருந்தனர். கோள்களின் நிலையை வைத்துப் புயல், மழை போன்றவை தோன்றும் காலங்களையும் கடல்நீர் பொங்கும் காலத்தையும் அறிந்து தகுந்த காலத்தில் கப்பல்களைச் செலுத்தினர்.

கலங்கரை விளக்கம்

கடலில் செல்லும் கப்பல்களுக்குத் துறைமுகம் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்காக அமைக்கப்படுவது கலங்கரை விளக்கம் ஆகும். உயரமான கோபுரத்தின் உச்சியில் ஒளிவீசும் விளக்கினைக் கொண்டதாக இஃது அமைக்கப்படும். கலம் என்றால் கப்பல். கரைதல் என்றால் அழைத்தல். கப்பலை அழைக்கும் விளக்கு என்னும் பொருளில் இது கலங்கரை விளக்கம் எனப்பட்டது.

துறைமுகத்தில் கரைக்கு அருகில் பெரிய கப்பல்கள் வர இயலாது. எனவே, கப்பலில் வரும் பொருள்களைத் தோணிகள் மூலம் கரைக்குக் கொண்டு வந்தனர். இச்செய்தியை,

கலம் தந்த பொற்பரிசம்
கழித்தோணியால் கரை சேர்க்குந்து (பாடல் 343) என்று புறநானூறு கூறுகிறது.

முற்காலத்தில் மக்கள் பயணம் செய்வதற்கு மட்டுமன்றிப் போர் புரியவும் கப்பல்கள் பெரிதும் பயன்பட்டன. ஆனால், இக்காலத்தில் பெரும்பாலும் பொருள்களை ஏற்றிச் செல்லவே கப்பல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றைச் சரக்குக் கப்பல்கள் என்பர். போருக்குப் பயன்படும் பெரிய கப்பல்களும் இன்று உள்ளன.

இத்தகைய சீர்மிகு கப்பற்கலையில் நம் முன்னோர் சிறந்து விளங்கினர் என்பது நமக்குப் பெருமை அளிக்கும் செய்தியாகும்.

தெரிந்து தெளிவோம்

கடல் ஆமைகள் இனப்பெருக்கத்துக்காகத் தகுந்த இடம் தேடி நீண்ட தூரம் பயணம் செய்கின்றன. அவை செல்லும் வழியைச் செயற்கைக்கோள்கள் மூலம் தற்போது ஆராய்ந்துள்ளனர். அவ்வழியில் உள்ள நாடுகளுடன் தமிழர்கள் வாணிகத் தொடர்பு கொண்டு இருந்ததை அறிய முடிகிறது. எனவே, பழந்தமிழர்கள் ஆமைகளை வழிகாட்டிகளாகப் பயன்படுத்திக் கடல் பயணம் செய்து இருக்கலாம் என்னும் கருத்தும் உள்ளது.

கற்பவை கற்றபின்

1. பலவகையான கப்பல்களின் படங்களைச் சேகரித்துப் படத்தொகுப்பு ஒன்று உருவாக்குக.
2. தரைவழிப் பயணம், கடல்வழிப்பயணம், வான்வழிப்பயணம் ஆகியவை குறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 33 22/01/2025 17:36:20

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. தமிழர்கள் சிறிய நீர்நிலைகளைக் கடக்கப் பயன்படுத்தியது ____________.

   அ) கலம்　　ஆ) வங்கம்　　இ) நாவாய்　　ஈ) ஓடம்

2. தொல்காப்பியம் கடற்பயணத்தை _____________ வழக்கம் என்று கூறுகிறது.

   அ) நன்னீர்　　ஆ) தண்ணீர்　　இ) முந்நீர்　　ஈ) கண்ணீர்

3. கப்பலை உரிய திசையில் திருப்புவதற்குப் பயன்படும் கருவி ___________.

   அ) சுக்கான்　　ஆ) நங்கூரம்　　இ) கண்ணடை　　ஈ) சமுக்கு

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காற்றின் உதவியால் செலுத்தப்படுபவை ___________ கப்பல்கள் எனப்பட்டன.
2. கப்பல் ஓரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது ____________.
3. உயரமான கோபுரத்தின் உச்சியில் ஒளிவீசும் விளக்கினைக் கொண்ட அமைப்பு ___________ ஆகும்.

பொருத்துக.

1. எரா　　–　திசைகாட்டும் கருவி
2. பருமல்　–　அடிமரம்
3. மீகாமன்　–　குறுக்கு மரம்
4. காந்த ஊசி –　கப்பலைச் செலுத்துபவர்

குறுவினா

1. தோணி என்னும் சொல்லின் பெயர்க்காரணத்தைக் கூறுக.
2. கப்பல் கட்டும்போது மரப்பலகைகளுக்கு இடையே தேங்காய் நார் (அ) பஞ்சு வைப்பதன் நோக்கம் என்ன?
3. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக.

சிறுவினா

1. சிறிய நீர்நிலைகளையும் கடல்களையும் கடக்க, தமிழர்கள் பயன்படுத்திய ஊர்திகளின் பெயர்களை எழுதுக.
2. பண்டைத் தமிழரின் கப்பல் செலுத்தும் முறை பற்றி எழுதுக.
3. கலங்கரை விளக்கம் – சிறுகுறிப்பு வரைக.

சிந்தனை வினா

தற்காலத்தில் மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குக் கடற்பயணத்தைப் பெரிதும் மேற்கொள்ளாதது ஏன் எனச் சிந்தித்து எழுதுக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 34　　22/01/2025 17:36:21

விரிவானம்

இயல் இரண்டு

விலங்குகள் உலகம்

நுழையும்முன்

காடு பறவைகள், விலங்குகள், தாவரங்கள் போன்ற பல்லுயிர்களின் வாழ்விடமாகும். காடுகளின் செழிப்புக்குக் காட்டுயிரிகள் உதவுகின்றன. மனிதனின் முதல் இருப்பிடம் காடுதான். அதன் மரபுத் தொடர்ச்சியாகத்தான் காட்டைப் பற்றியும் காட்டு விலங்குகள் பற்றியும் அறியும் ஆர்வம் மனிதர்களிடம் இன்றும் தொடர்கிறது. காட்டு விலங்குகளின் உறைவிடமான களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்துள் ஓர் உலா வருவோமா!

பள்ளியிலிருந்து வீடு திரும்பிய ஆதினி தன் அம்மாவுக்காகக் காத்திருந்தாள். பணியில் இருந்து வீடு திரும்பிய அம்மாவிடம் 'அம்மா! எனக்குக் காட்டு விலங்குகள் பற்றிய புகைப்படத் தொகுப்பு ஒன்று தயாரிக்க வேண்டி இருக்கிறது. அதற்குத் தாங்கள்தான் உதவ வேண்டும்' என்று கூறினாள். 'அப்படியா! எனக்குத் தெரிந்த வனஅலுவலர் ஒருவர் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்தில் பணியாற்றுகிறார். அவரிடம் முன் இசைவு பெற்று நாளை நாம் அங்குச் செல்லலாம். அப்பொழுது நீ காட்டு விலங்குகளைப் புகைப்படம் எடுக்கலாம். அவற்றைப் பற்றிய தகவல்களையும் தெரிந்து கொள்ளலாம். என்ன மகிழ்ச்சிதானே!' என்றார் அம்மா.

மறுநாள் ஆதினியும் அவளது தாய் மலர்விழியும் களக்காடு முண்டந்துறை புலிகள் காப்பகத்திற்குச் சென்றனர். அவர்கள் இருவரையும் பாதுகாப்பு ஊர்தியில் ஏற்றிக் காட்டுக்குள் அழைத்துச் சென்றார் வனவர். அப்போது...

மலர்விழி : இந்தப் புலிகள் காப்பகம் பற்றி நாங்கள் தெரிந்து கொள்ளலாமா ஐயா?

வனவர் : இது தமிழ்நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய புலிகள் காப்பகம். இது 895 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டது. இங்கு புலி, சிறுத்தை, யானை, மான், கரடி, காட்டுமாடு போன்ற அரிய விலங்குகள் வாழ்கின்றன. அவற்றை எல்லாம் பார்க்கலாம்.

(அப்போது தூரத்தில் யானைக் கூட்டம் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அதைப் பார்த்த ஆதினி 'யானை! யானை!' என்று மகிழ்ச்சியுடன் கைதட்டினாள். பின்பு அந்த யானைகளைப் புகைப்படம் எடுத்துக்கொண்டாள்.)

ஆதினி : மாமா! யானையைப் பற்றிப் புதிய தகவல்கள் ஏதாவது சொல்லுங்களேன்?

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 35 22/01/2025 17:36:21

ஆசிய யானை

ஆப்பிரிக்க யானை

வனவர் : உலகில் இரண்டு வகையான யானைகள் உள்ளன. ஒன்று ஆசிய யானை; இன்னொன்று ஆப்பிரிக்க யானை.

மலர்விழி : ஆசிய யானைகளில் ஆண் யானைக்குத் தந்தம் உண்டு. பெண் யானைக்குத் தந்தம் இல்லை. ஆனால், ஆப்பிரிக்க யானைகளில் இரண்டுக்குமே தந்தம் உண்டு. சரிதானே ஐயா?

வனவர் : சரியாகச் சொன்னீர்கள்! அது மட்டுமன்றி அவற்றின் உயரம், நிறம், நகம் ஆகியவற்றிலும் சில வேறுபாடுகள் உள்ளன.

ஆதினி : மாமா! யானைகள் எப்போதும் கூட்டமாகத்தான் இருக்குமா?

வனவர் : ஆம் ஆதினி. யானைகள் எப்பொழுதும் கூட்டமாகத்தான் வாழும். இந்தக் கூட்டத்திற்கு ஒரு பெண் யானைதான் தலைமை தாங்கும். யானைகள் தங்களுக்குத் தேவையான தண்ணீர், உணவு ஆகியவற்றிற்காக இடம்பெயர்ந்துகொண்டே இருக்கும். ஒரு யானை நாள் ஒன்றுக்கு 250 கிலோ புல், இலை தழைகளை உணவாக உட்கொள்ளும். அதற்குக் குடிக்க அறுபத்தைந்து லிட்டர் தண்ணீர் தேவைப்படும். யானை மிகுந்த நினைவாற்றல் கொண்ட விலங்கு. அது பாசம் நிறைந்த விலங்கும் கூட. மேலும் யானைக்குக் கண்பார்வை குறைவு; கேட்கும் ஆற்றலும் மோப்ப ஆற்றலும் மிகுதி.

மலர்விழி : ஆனால், யானைகள் மனிதர்களைத் தாக்குவதாகச் ஊடகங்களில் செய்திகள் வருகின்றனவே ஐயா?

வனவர் : யானைகள் பொதுவாக மனிதர்களைத் தாக்குவது இல்லை. அவற்றின் வழித்தடங்களில் நாம் குறுக்கிடும்போதுதான் நம்மைத் தாக்குகின்றன.

(அவர்கள் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் யானைகள் அவ்விடத்தைக் கடந்து சென்றன. ஊர்தி தொடர்ந்து மேலே சென்றது.)

ஆதினி : அதோ! அந்த மரத்தின் மீது எவ்வளவு பெரிய கரடி. கரடிக்கு மரம் ஏறத்தெரியுமா?

வனவர் : கரடி ஓர் அனைத்துண்ணி. அது பழங்கள், தேன் போன்றவற்றை உண்பதற்காக மரங்களில் ஏறும். உதிர்ந்த மலர்கள், காய்கள், கனிகள், புற்றீசல் ஆகியவற்றையும் தேடி உண்ணும். கறையான் அதற்கு மிகவும் பிடித்த உணவு.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 36 22/01/2025 17:36:21

மலர்விழி : தேன்கூட்டைக் கலைக்கும்போது தேனீக்கள் அதைக் கொட்டிவிடாதா ஐயா?

வனவர் : கரடியின் உடலைப் போர்த்தி இருக்கும் அடர்ந்த முடிகள் தேனீக்களிடமிருந்து அதனைக் காப்பாற்றிவிடும். நன்கு வளர்ந்த கரடி 160 கிலோ எடை வரை இருக்கும்.

(ஆதினி தன் அலைபேசியில் கரடியைப் புகைப்படம் எடுத்துக்கொண்டாள். சிறிது தூரம் சென்றதும் வனவர் ஊர்தியை நிறுத்தினார். சற்றுத் தொலைவில் புல்வெளியில் புலி ஒன்று படுத்திருந்தது. வனவர் அதை அனைவருக்கும் காட்டினார்.)

ஆதினி : மாமா இங்கு ஒரே ஒரு புலிதானே இருக்கிறது.

வனவர் : ஆமாம். புலிகள் தனித்து வாழும் இயல்புடையவை. ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஒரு புலி மட்டுமே வாழும். மற்ற புலிகள் அந்த எல்லைக்குள் செல்லாது. கருவுற்ற புலியானது தொண்ணூறு நாள்களில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் ஈனும். அந்தக் குட்டிகளை இரண்டு ஆண்டுகள் வரை வளர்க்கும். அவை வேட்டையாடக் கற்றவுடன் அவற்றுக்கான எல்லைகளையும் பிரித்துத் தனியாக அனுப்பிவிடும்.

மலர்விழி : அரிய தகவலாக இருக்கிறதே!

வனவர் : ஆம். புலிதான் ஒரு காட்டின் வளத்தைக் குறிக்கும் குறியீடு. புலி தனக்கான உணவை வேட்டையாடிய பின்பு வேறு எந்த விலங்கையும் வேட்டையாடுவதில்லை. எனவே, அதனைப் பண்புள்ள விலங்கு என்று நாங்கள் கூறுவோம்.

ஆதினி : 'காட்டுக்கு அரசன்' என்று சிங்கத்தைச் சொல்கிறார்களே! அதுபற்றிச் சொல்லுங்கள் மாமா.

வனவர் : உலகில் ஆசியச் சிங்கம், ஆப்பிரிக்கச் சிங்கம் என இரண்டு வகைச் சிங்கங்கள் உள்ளன. இந்தியாவில் குஜராத் மாநிலத்தில் 'கிர் சரணாலயத்தில்' மட்டுமே ஆசியச் சிங்கங்கள் வாழ்கின்றன. நீளம், உயரம், பருமன், எடை, பலம், வேட்டைத்திறன் ஆகிய அனைத்திலும் சிங்கத்தை விட புலியே உயர்ந்தது. எனவே இயற்கை விஞ்ஞானிகள் புலியையே காட்டுக்கு அரசன் என்கிறார்கள்.

தெரிந்து தெளிவோம்

- தமிழ்நாட்டில் வனக்கல்லூரி அமைந்துள்ள இடம் – மேட்டுப்பாளையம் (கோவை மாவட்டம்)
- கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இளநிலை வனவியல் (BSc. Forestry), முதுநிலை வனவியல் (MSc. Forestry) ஆகிய படிப்புகள் உள்ளன.

(ஊர்தி அலுவலகம் நோக்கி விரையும் வழியில் ஒரு புள்ளிமான் தன் குட்டியுடன் புல்தரையில் நின்றுகொண்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் ஆதினி ஊர்தியை நிறுத்தச் சொல்லிக் கீழே இறங்கி புகைப்படம் எடுத்துக்கொண்டாள்.)

வனவர் : ஆதினி, இவை புள்ளிமான்கள். இந்தியாவில் சருகுமான், மிளாமான், வெளிமான் எனப் பல வகையான மான்கள் உள்ளன. எல்லா வகை மான்களிலும் புள்ளிமான்களே அழகில் சிறந்தவை என்பர்.

(ஆதினியும் அவள் தாய் மலர்விழியும் வனஅலுவலர்க்கு நன்றி கூறி விடைபெற்றனர்.)

தெரிந்து தெளிவோம்

அஸ்ஸாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா ஆற்றின் நடுவே செடி கொடிகள் வளர முடியாத தீவுப் பகுதி ஒன்று இருந்தது. அத்தீவை மரங்கள் அடர்ந்த காடாக மாற்ற விரும்பினார் ஒருவர். பேராசிரியர் ஜாதுநாத் என்பவரின் ஆலோசனைப்படி நாள்தோறும் நூற்றுக்கணக்கான சிவப்புக் கட்டெறும்புகளை அந்தத் தீவில் கொண்டு வந்து விட்டார். அதனால் மண்ணின் தன்மை மாறியது.

அதன் பிறகு தமக்குக் கிடைத்த விதைகளை எல்லாம் கொண்டு வந்து அத்தீவில் நட்டு வைத்தார். ஆற்றில் இருந்து நாள்தோறும் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றினார். அவர் நட்ட விதைகள் முளைத்து மரங்களாக வளரத் தொடங்கியபோது அவற்றில் பறவைகள் வந்து தங்கின. பறவைகளின் எச்சத்தால் பரவிய விதைகள் மூலம் காடு மேலும் வளர்ந்தது. அங்கு முயல், மான், காட்டுமாடு முதலிய விலங்குகள் பலவும் வந்தன. பிறகு யானைக் கூட்டம் வந்தது. நிறைவாக, காட்டின் வளம் என்று குறிக்கப்படும் புலிகளும் வந்து தங்கின. இவ்வாறு தனி ஒரு மனிதனாக ஒரு காட்டையே உருவாக்கியவர்தான் இந்திய வனமகன் என்று அழைக்கப்படும் ஜாதவ் பயேங். இவருக்கு இந்திய அரசு 2015ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கியது. மேலும், கௌகாத்தி பல்கலைக்கழகம் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி உள்ளது.

கற்பவை கற்றபின்

1. விலங்குகள் தொடர்பான பழமொழிகளைத் திரட்டி வருக.
   (எ.கா.) புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது.
2. காட்டு விலங்குகளின் படங்களைத் திரட்டிப் படத்தொகுப்பு உருவாக்குக.

மதிப்பீடு

எவையேனும் மூன்று வனவிலங்குகள் பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 38 22/01/2025 17:36:22

இயல் இரண்டு

நால்வகைக் குறுக்கங்கள்

ஒவ்வோர் எழுத்துக்கும் அதை ஒலிப்பதற்கு உரிய கால அளவு உண்டு. இதை மாத்திரை என்கிறோம். ஆனால் எல்லா எழுத்துகளும் எல்லா இடங்களிலும் தமக்குரிய மாத்திரை அளவில் முழுமையாக ஒலிப்பதில்லை. சில எழுத்துகள் சில இடங்களில் தமக்குரிய கால அளவைவிடக் குறைவாக ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் எழுத்துகளைக் குறுக்கங்கள் என்கிறோம்.

ஐகாரக்குறுக்கம்

ஐ, கை, பை என ஐகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. வையம், சமையல், பறவை என சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஐகாரம் ஐகாரக்குறுக்கம் எனப்படும்.

ஐகாரம் சொல்லின் முதலில் வரும்போது ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஐகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வரும்போது ஒரு மாத்திரை அளவில் ஒலிக்கும்.

ஔகாரக்குறுக்கம்

ஔ, வௌ என ஔகார எழுத்து, தனித்து வரும் இடங்களில் தனக்குரிய இரண்டு மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது. ஔவையார், வௌவால் எனச் சொற்களின் முதலில் வரும்போது தனக்குரிய இரண்டு மாத்திரை அளவிலிருந்து குறைந்து ஒன்றரை மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஔகாரம் ஔகாரக்குறுக்கம் எனப்படும்.

ஔகாரம் சொல்லின் இடையிலும் இறுதியிலும் வராது.

மகரக்குறுக்கம்

அம்மா, பாடம் படித்தான் ஆகிய சொற்களில் மகர மெய்யெழுத்து தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

வலம் வந்தான் என்பதில் மகர மெய்யெழுத்தை அடுத்து வகர எழுத்து வருவதால் மகரமெய்யானது தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது.

போலும் என்னும் சொல்லைப் போன்ம் என்றும், மருளும் என்னும் சொல்லை

மருண்ம் என்றும் செய்யுளில் ஓசைச் சீர்மைக்காகப் பயன்படுத்தினர். இச்சொற்களில் மகரமெய்யானது ன், ண் ஆகிய எழுத்துகளை அடுத்து வருவதால் தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் மகரம் மகரக்குறுக்கம் எனப்படும்.

ஆய்தக் குறுக்கம்

அஃது, எஃகு ஆகிய சொற்களில் ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவில் முழுமையாக ஒலிக்கிறது.

முள் + தீது என்பது முஃடீது எனவும், கல் + தீது என்பது கஃறீது எனவும் சேரும். இச்சொற்களில் உள்ள ஆய்த எழுத்து, தனக்குரிய அரை மாத்திரை அளவிலிருந்து குறைந்து கால் மாத்திரை அளவில் ஒலிக்கிறது. இவ்வாறு குறைந்து ஒலிக்கும் ஆய்தம் ஆய்தக்குறுக்கம் எனப்படும்.

கற்பவை கற்றபின்

ஐகார, ஔகார, மகர, ஆய்தக்குறுக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமையும் சொற்களைத் தொகுத்து எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'வேட்கை' என்னும் சொல்லில் ஐகாரக் குறுக்கம் பெறும் மாத்திரை அளவு ______.

   அ) அரை ஆ) ஒன்று இ) ஒன்றரை ஈ) இரண்டு

2. மகரக் குறுக்கம் இடம்பெறாத சொல் ________.

   அ) போன்ம் ஆ) மருண்ம் இ) பழம் விழுந்தது ஈ) பணம் கிடைத்தது

3. சொல்லின் முதலில் மட்டுமே இடம் பெறுவது _______.

   அ) ஐகாரக் குறுக்கம் ஆ) ஔகாரக் குறுக்கம்

   இ) மகரக் குறுக்கம் ஈ) ஆய்தக் குறுக்கம்

குறுவினா

1. ஔகாரம் எப்பொழுது முழுமையாக ஒலிக்கும்?
2. சொல்லின் முதல், இடை, இறுதி ஆகிய இடங்களில் ஐகாரக்குறுக்கம் பெறும் மாத்திரை அளவு யாது?
3. மகரக்குறுக்கத்துக்கு இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 40 22/01/2025 17:36:22

மொழியை ஆள்வோம்!

கேட்க.

இயற்கை ஆர்வலர் ஒருவரது உரையைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றைப் பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

1. காட்டு வளமே நாட்டு வளம்!
2. காட்டின் பயன்கள்.

அறிந்து பயன்படுத்துவோம்.

கடிதம் எழுதுதல்

தொலைவில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ள உதவும் ஊடகங்களுள் ஒன்று கடிதம் ஆகும். கடிதம் எழுதுதல் ஒரு தனிக்கலையாகும்.

கடிதம் இரண்டு வகைப்படும். அவை உறவுமுறைக் கடிதம், அலுவலகக் கடிதம் என்பவை ஆகும்.

நம் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் எழுதப்படும் கடிதம் உறவுமுறைக் கடிதம் ஆகும். இக்கடிதம் ஐந்து பகுதிகளைக் கொண்டது.

1. இடமும் தேதியும்
2. விளி
3. உடல்பகுதி
4. கையொப்பம்
5. உறைமேல் முகவரி ஆகியவை ஆகும்.

இடமும் தேதியும் கடிதத்தின் வலது மேல்பகுதியில் எழுதப்பட வேண்டும்.

விளி, கடிதத்தின் இடப்பக்கம் இடம் பெறும். கடிதம் யாருக்கு எழுதப்படுகிறதோ அவரை நோக்கிக் கூறுவதாக விளி அமையும். (எ.கா.) அன்புள்ள நண்பா,

கடிதத்தின் உடல் பகுதியில் சொல்ல வேண்டிய செய்தியைத் தெளிவாக எழுதவேண்டும்.

கையொப்பம், கடிதம் முடியும்போது வலப்புறத்தின் கீழ்ப்பகுதியில் இடம்பெறும்.

(எ.கா.) இப்படிக்கு,
உன் அன்பு நண்பன்,
பா. இன்பன்

கடித உறையின்மேல் இடம்பெற வேண்டிய பெறுநர் முகவரியைக் கடிதத்தின் இறுதியில் எழுதுவது மரபு. பெயரில் தொடங்கி முழு முகவரியையும் அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் எழுத வேண்டும்.

கடிதம் எழுதுக.

நீங்கள் சென்று வந்த சுற்றுலா குறித்து உங்கள் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 41 22/01/2025 17:36:22

மொழியோடு விளையாடு

வட்டத்திலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்திச் சொற்களை அமைக்க.

___________ ___________

___________ ___________

___________ ___________

___________ ___________

___________ ___________

சொற்களை இணைத்துப் புதிய சொற்கள் அமைக்க.

வாழை	தயிர்	கூடு	திடல்	பாட்டு
குருவி	கொய்யா	சோறு	பழம்	பறவை
விளையாட்டு	கூட்டம்	அவரை	போட்டி	காய்

(எ.கா.) வாழை + காய் = வாழைக்காய்

விடுகதைகளுக்கு விடை எழுதுக.

1. மரம் விட்டு மரம் தாவுவேன்; குரங்கு அல்ல.
வளைந்த வாலுண்டு; புலி அல்ல.
கொட்டைகளைக் கொறிப்பேன்; கிளி அல்ல.
முதுகில் கோடுகளை உடையவன். நான் யார்? ____________.

2. வெள்ளையாய் இருப்பேன்; பால் அல்ல.
மீன் பிடிப்பேன்; தூண்டில் அல்ல.
தவமிருப்பேன்; முனிவரல்லர் நான் யார்? ____________.

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

1. என்னால் இயன்ற அளவு மரக்கன்றுகளை நட்டு வளர்ப்பேன்.
2. இயற்கைச் சமநிலையைப் பேணிப் பாதுகாப்பேன்.

படிப்போம்; பயன்படுத்துவோம்!

உவமை – *Parable*
வனவியல் – *Forestry*
இயற்கை வளம் – *Natural Resource*
வனப் பாதுகாவலர் – *Conservator of Forest*

வாழ்வியல்

இயல் இரண்டு

திருக்குறள்



"அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்"

என்று திருக்குறளின் பெருமையை ஔவையார் போற்றுகிறார். மனித சமுதாயத்தை ஆழ்ந்து நோக்கி, அஃது எவ்வாறு வாழ வேண்டும் என்று நன்கு சிந்தித்து எழுதப்பட்ட நூல் திருக்குறள். இது போன்ற ஒரு நூல் உலகில் எந்த மொழியிலும் இதுவரை தோன்றியது இல்லை என்பர். அத்தகைய பெருமைமிகு திருக்குறளைப் படிப்போம்.

அழுக்காறாமை

1. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து*
   அழுக்காறு இலாத இயல்பு.

   பொருள் : ஒருவர் தன் நெஞ்சில் பொறாமையில்லாத பண்பையே ஒழுக்க நெறியாகக் கொண்டு வாழ வேண்டும்.

2. *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்*
   கேடும் நினைக்கப் படும்.

   பொருள்: பொறாமை கொண்டவருடைய செல்வமும், பொறாமை இல்லாதவருடைய வறுமையும் சான்றோரால் ஆராயப்படும்.

புறங்கூறாமை

3. *கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க*
   முன்இன்று பின்நோக்காச் சொல்.

   பொருள்: ஒருவருக்கு நேர்நின்று கடுமையான சொற்களைச் சொன்னாலும் சொல்லலாம். ஆனால், அவர் இல்லாதபோது புறங்கூறுதல் கூடாது.

4. *ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்*
   *தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.**

   பொருள்: பிறருடைய குற்றத்தைக் காண்பது போல், தன்னுடைய குற்றத்தையும் காண்பவருடைய வாழ்வில் துன்பம் இல்லை.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 43 22/01/2025 17:36:22

அருளுடைமை

5. *அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்*
பூரியார் கண்ணும் உள.

பொருள்: அருளாகிய செல்வமே செல்வங்களுள் சிறந்த செல்வமாகும். பொருட்செல்வம் இழிந்தவரிடத்திலும் உள்ளது.

அணி: சொற்பொருள் பின்வருநிலை அணி

6. *வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்*
மெலியார்மேல் செல்லும் இடத்து.

பொருள்: ஒருவர் தம்மைவிட மெலிந்தவரைத் துன்புறுத்தும்போது, தம்மைவிட வலிமையுடையவரின் முன் தாம் அஞ்சி நிற்கும் நிலையை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

வாய்மை

7. *வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்.**

பொருள்: வாய்மை எனப்படுவது மற்றவர்க்கு ஒரு தீங்கும் தராத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

8. *தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்*
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள்: ஒருவர் தம் நெஞ்சறியப் பொய் சொல்லக்கூடாது. அவ்வாறு கூறினால் அவர் நெஞ்சமே அவரை வருத்தும்.

9. *உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்.**

பொருள்: உள்ளத்தில் பொய் இல்லாமல் வாழ்பவர், உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவர் ஆவார்.

இறைமாட்சி

10. *இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
*வகுத்தலும் வல்லது அரசு.**

பொருள்: பொருள் வரும் வழிகளை அறிதலும், அவ்வழிகளில் பொருள்களைச் சேர்த்தலும், சேர்த்த பொருளைப் பாதுகாத்தலும், காத்த பொருளைப் பயனுள்ள வகையில் திட்டமிட்டுச் செலவிடுதலும் சிறந்த அரசின் செயல்களாகும்.

சொற்பொருள் பின்வருநிலை அணி (குறள் எண்: 5)

ஒரு செய்யுளில் ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தந்தால் அது சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

செல்வம் என்னும் சொல் ஒரே பொருளில் மீண்டும் மீண்டும் வந்துள்ளது. எனவே, இக்குறளில் உள்ளது சொற்பொருள் பின்வருநிலை அணி ஆகும்.

முரண் – ஆக்கமும் – கேடும், வலியார் – மெலியார்

ஆக்கம் என்பதன் பொருள் செல்வம். கேடு என்பதன் பொருள் வறுமை. இவ்வாறு ஒரு செய்யுளில் எதிர்ச்சொற்கள் அமைவதை முரண்தொடை என்பர்.

நூல் வெளி

திருக்குறளைத் தந்த திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர் என்று கூறுவர். இவர் முதற்பாவலர், பொய்யில் புலவர், செந்நாப்போதார் போன்ற சிறப்புப் பெயர்களாலும் குறிப்பிடப்படுகிறார்.

தமிழ்நூல்களில் 'திரு' என்னும் அடைமொழியோடு வருகின்ற முதல் நூல் திருக்குறள் ஆகும். திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்ற மூன்று பகுப்புகளைக் கொண்டது. இதில் அறம்–38, பொருள்–70, இன்பம்–25 என மொத்தம் 133 அதிகாரங்கள் உள்ளன. அதிகாரத்திற்கு 10 குறட்பாக்கள் வீதம் 1330 குறட்பாக்கள் உள்ளன. இதற்கு முப்பால், தெய்வநூல், பொய்யாமொழி போன்ற பிற பெயர்களும் உள்ளன.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வாய்மை எனப்படுவது ______.

அ) அன்பாகப் பேசுதல் ஆ) தீங்குதராத சொற்களைப் பேசுதல்

இ) தமிழில் பேசுதல் ஈ) சத்தமாகப் பேசுதல்

2. ______ செல்வம் சான்றோர்களால் ஆராயப்படும்.

அ) மன்னன் ஆ) பொறாமை இல்லாதவன்

இ) பொறாமை உள்ளவன் ஈ) செல்வந்தன்

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 45 22/01/2025 17:36:23

3. 'பொருட்செல்வம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

அ) பொரு + செல்வம் ஆ) பொருட் + செல்வம்

இ) பொருள் + செல்வம் ஈ) பொரும் + செல்வம்

4. 'யாதெனின்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.

அ) யா + எனின் ஆ) யாது + தெனின் இ) யா + தெனின் ஈ) யாது + எனின்

5. தன்+நெஞ்சு என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______.

அ) தன்நெஞ்சு ஆ) தன்னெஞ்சு இ) தானெஞ்சு ஈ) தனெஞ்சு

6. தீது+உண்டோ என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் __________.

அ) தீதுண்டோ ஆ) தீதுஉண்டோ இ) தீதிண்டோ ஈ) தீயுண்டோ

7. கண்நின்று எனத் தொடங்கும் குறளில் அமைந்துள்ள முரண்தொடைச் சொற்கள் __________.

அ) கண்நின்று – முன்னின்று ஆ) கண்நின்று – சொல்லினும்

இ) சொல்லினும் – சொல்லற்க ஈ) கண்அற – சொல்லற்க

குறுவினா

1. எப்போது தன்நெஞ்சே தன்னை வருத்தும்?
2. வாழும் நெறி யாது?
3. உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் இருப்பவன் யார்?
4. சொற்பொருள் பின்வருநிலை அணி எவ்வாறு வரும்?

பின்வரும் பத்திக்குப் பொருத்தமான திருக்குறளைத் தேர்ந்தெடு.

அறவழி என்றவுடன் நம் நினைவுக்கு வருபவர் தேசத்தந்தை காந்தியடிகள். அவர் தம் சிறு வயதில் 'அரிச்சந்திரன்' நாடகத்தைப் பார்த்தார். அதில் அரிச்சந்திரன் என்னும் மன்னர் 'பொய் பேசாமை' என்னும் அறத்தை எத்தகைய சூழ்நிலையிலும் தவறாமல் கடைப்பிடித்தார். இந்த நாடகத்தைக் கண்ட காந்தியடிகள் தாமும் பொய் பேசாமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று உறுதி பூண்டார். அதனைத் தம் வாழ்நாள் முழுவதும் பின்பற்றினார். இப்பண்பு காந்தியடிகள் அனைவருடைய இதயத்திலும் இடம் பிடிக்கக் காரணமாக அமைந்தது.

1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
   அழுக்காறு இலாத இயல்பு.
2. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
   தீமை இலாத சொலல்.
3. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
   உள்ளத்துள் எல்லாம் உளன்.

7th Std - Tamil_2025_Term_I_Unit 2.indd 46 22/01/2025 17:36:23

இயல்
மூன்று

நாடு அதை நாடு

IKBUO



கற்றல் நோக்கங்கள்

- விடுதலைத் திருநாள் பற்றிய புதுக்கவிதையைப் படித்துப் பொருள் நயம் உணர்தல்
- நாட்டுப்பற்றில் சிறந்து விளங்கிய ஆளுமைகள் குறித்த தகவல்களைப் பாடப்பகுதி வழி புரிந்து கொள்ளுதல்
- சொற்கள் மற்றும் தொடர்களில் பயின்றுவரும் வினைமுற்றுகளை அறிந்து பயன்படுத்துதல்

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 47 28/01/2025 15:27:24

கவிதைப்பேழை

இயல் மூன்று

விடுதலைத் திருநாள்

நுழையும்முன்

பிறந்தநாள், திருமணநாள் போன்றன தொடர்புடைய குடும்பத்தினருக்கு மட்டுமே மகிழ்ச்சி அளிக்கும் நாள்களாகும். சமயத் தொடர்பான விழாக்கள் குறிப்பிட்ட சமயத்தினருக்கு மட்டுமே மகிழ்ச்சி அளிக்கும். இந்தியர் அனைவருக்கும் மகிழ்ச்சி அளிக்கும் இன்றியமையா நாள் ஒன்றின் சிறப்பை அறிவோம்.

முன்னூறு வருடமாய்
முற்றுகை யிட்ட
அந்நிய இருட்டின்
அரக்கக் கூத்து
முடிந்தது என்று
முழங்கி நின்றது
எந்த நாளோ
அந்த நாள் இது.

செத்த பிணமாய்ச்
சீவனில் லாமல்
மொத்தமாய்த் தேசத்தை
முற்றுகையிட்ட
மூட மூட
நிர்மூட உறக்கத்தை
ஓட ஓட
விரட்டி யடித்து
விழிக்க வைத்தது –
வையம்
வியக்க வைத்தது –
எந்த நாளோ
அந்த நாள் இது.

பரிதவித் திருந்த
பாரத அன்னை
காளியாய்ச் சீறிக்
கைவிலங் கொடித்து
பகையைத் துடைத்து
சத்திய நெஞ்சின்
சபதம் முடித்து
கூந்தல் முடித்துக்
குங்குமப் பொட்டு வைத்து
ஆனந்த தரிசனம்
அளித்து நின்றது
எந்த நாளோ
அந்த நாள்இது.

சதி வழக்கினிலே
சம்பந்தப் பட்டுத்
தூக்குக் கயிற்றில்
தொங்கப் போகும்
கடைசிக் கணத்திலும்
கண்முன் நிறுத்திப்
பகத்சிங் பார்த்துப்
பரவசப் பட்ட
அற்புத விடியலை
அழைத்து வந்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.

முற்றிப் படர்ந்த
முட்காட்டை எரித்து
விளைந்த மூங்கிலை
வீரமாய்த் துளைத்து
மூச்சுக் காற்றை
மோகித்து நுழைத்து
புரட்சிப்
புல்லாங் குழலில்
பூபாளம் இசைத்தது
எந்த நாளோ
அந்த நாள் இது.

இதந்தரும் இந்தச்
சுதந்திர நாளைச்
சொந்தம் கொண்டாடத்
தந்த பூமியைத்
தமிழால் வணங்குவோம்.

– மீரா

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 48 28/01/2025 15:27:25

சொல்லும் பொருளும்

சீவன்	–	உயிர்	வையம்	–	உலகம்
சத்தியம்	–	உண்மை	சபதம்	–	சூளுரை
ஆனந்த தரிசனம்	–	மகிழ்வான காட்சி	மோகித்து	–	விரும்பி

பாடலின் பொருள்

முந்நூறு ஆண்டுகள் நம்மை அடிமைப்படுத்தி ஆண்ட அரக்கராகிய அந்நியரின் இருண்ட ஆட்சி முடிந்தது என்பதைக் கூறும் நாள் இன்று. உயிரற்ற பிணங்களைப் போலக் கிடந்த நாட்டு மக்கள் அனைவரையும் பற்றியிருந்த அறியாமை என்னும் உறக்கத்தை ஓட ஓட விரட்டிய நாள் இன்று.

அடிமையாய்த் தவித்துக் கொண்டிருந்த இந்தியத்தாய் சினந்து எழுந்து தன் கைவிலங்கை உடைத்துப் பகைவரை அழித்து, அவிழ்ந்த கூந்தலை முடித்து நெற்றியில் திலகமிட்டு, இந்தியருக்கு மகிழ்வான காட்சியை அளித்த நாள் இன்று.

சதி வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பகத்சிங், தூக்கிலிடப்படும் கடைசி நேரத்திலும் தன் மனக்கண்ணில் கனவுகண்ட இந்தியாவின் விடியல் தோன்றிய நாள் இன்று. பகைமை என்னும் முள்காட்டினை அழித்து, அங்கு விளைந்த மூங்கிலைப் புரட்சி என்னும் புல்லாங்குழல் ஆக்கி மூச்சுக்காற்றால் பூபாள இசை பாடும் இனிய நாள் இன்று.

இன்பம் தரும் இந்த விடுதலைத் திருநாளைக் கொண்டாட வாய்ப்பளித்த நம் தாய்நாட்டை தமிழால் வணங்குவோம்.

நூல் வெளி

மீ. இராசேந்திரன் என்னும் இயற்பெயரை உடைய மீரா கல்லூரிப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அன்னம் விடு தூது என்னும் இதழை நடத்தியவர். ஊசிகள், குக்கூ, மூன்றும் ஆறும், வா இந்தப் பக்கம் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

இவர் எழுதிய கோடையும் வசந்தமும் என்னும் நூலிலிருந்து ஒரு கவிதை இங்குத் தரப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

நீங்கள் விரும்பும் விழா ஒன்றனைப் பற்றி ஒரு பத்தி அளவில் எழுதுக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 49 28/01/2025 15:27:25

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வானில் முழுநிலவு அழகாகத் ____________ அளித்தது.

   அ) தயவு ஆ) தரிசனம் இ) துணிவு ஈ) தயக்கம்

2. இந்த __________ முழுவதும் போற்றும்படி வாழ்வதே சிறந்த வாழ்வு.

   அ) வையம் ஆ) வானம் இ) ஆழி ஈ) கானகம்

3. 'சீவனில்லாமல்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) சீவ + நில்லாமல் ஆ) சீவன் + நில்லாமல்

   இ) சீவன் + இல்லாமல் ஈ) சீவ + இல்லாமல்

4. 'விலங்கொடித்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _____.

   அ) விலம் + கொடித்து ஆ) விலம் + ஒடித்து

   இ) விலன் + ஒடித்து ஈ) விலங்கு + ஒடித்து

5. காட்டை + எரித்து என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) காட்டைஎரித்து ஆ) காட்டையெரித்து

   இ) காடுஎரித்து ஈ) காடுயெரித்து

6. இதம் + தரும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

   அ) இதந்தரும் ஆ) இதம்தரும் இ) இதத்தரும் ஈ) இதைத்தரும்

குறுவினா

1. பகத்சிங் கண்ட கனவு யாது?
2. இருண்ட ஆட்சி என எதனை மீரா குறிப்பிடுகிறார்?

சிறுவினா

இந்தியத்தாய் எவ்வாறு காட்சியளிக்கிறாள்?

சிந்தனை வினா

நாட்டுப்பற்றை வளர்க்கும் வகையில் விடுதலை நாளை எவ்வாறு கொண்டாடலாம்?

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 50 28/01/2025 15:27:25

இயல் மூன்று

தேசியம் காத்த செம்மல் பசும்பொன் உ. முத்துராமலிங்கத்தேவர்

நுழையும்முன்

தமது தொண்டால் மக்களின் உள்ளங்களைக் கவர்ந்த தலைவர்கள் பலர். நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்டோர் பலர். சமுதாயப் பணி செய்தோர் பலர். அரசியல் பணி செய்தோர் பலர். இவை அனைத்தையும் ஒருசேரச் செய்து புகழ் பெற்ற தலைவர் ஒருவரைப் பற்றி அறிவோம்.

தேசியம் உடல், தெய்வீகம் உயிர் எனக் கருதி மக்கள் தொண்டு செய்தவர் பசும்பொன் உ. முத்துராமலிங்கத்தேவர். இவர் 'வீரப்பேச்சால் எத்தனையோ தியாகிகளையும் விவேகப்பேச்சால் எத்தனையோ அறிவாளிகளையும் உண்டாக்கியவர்; உண்மையை மறைக்காமல் வெளியிடுவதில் தனித்துணிச்சல் பெற்றவர்; சுத்தத் தியாகி' என்று தந்தை பெரியாரால் பாராட்டப்பட்டவர்.

இளமைக்காலம்

முத்துராமலிங்கத்தேவர் பொ.ஆ. (கி.பி.) 1908ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாள் இராமநாதபுரம் மாவட்டத்தில் பசும்பொன் என்னும் ஊரில் செல்வச் செழிப்பு மிகுந்த குடும்பத்தில் பிறந்தார். அவருடைய பெற்றோர் உக்கிர பாண்டியத்தேவர் – இந்திராணி அம்மையார். இவர் இளமையிலேயே அன்னையை இழந்ததால் இசுலாமியத் தாய் ஒருவரால் பாலூட்டி வளர்க்கப்பட்டார்.

முத்துராமலிங்கத்தேவர் தன் தொடக்கக்கல்வியைக் கமுதியிலும் உயர்நிலைக் கல்வியை மதுரை பசுமலைப் பள்ளியிலும் இராமநாதபுரத்திலும் பயின்றார். இவர் இராமநாதபுரத்தில் படித்துக் கொண்டிருந்தபோது அவ்வூரில் பிளேக் நோய் பரவியதால் அவரது படிப்பு பாதியில் நின்றது. அதன்பிறகு தாமாகவே நிறைய நூல்களைப்

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 51 28/01/2025 15:27:25

படித்துத் தமது அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார்.

பல்துறை ஆற்றல்

முத்துராமலிங்கத்தேவர் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் சொற்பொழிவு ஆற்றும் திறன் பெற்றிருந்தார். சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கிசுடுதல், சோதிடம், மருத்துவம் போன்ற பலதுறைகளிலும் ஆற்றல் உடையவராக விளங்கினார். முத்துராமலிங்கத்தேவர் இளமையிலேயே அரசியலில் ஆர்வம் கொண்டிருந்தார்.

விடுதலைப் போராட்டத்தில் பங்கு

முத்துராமலிங்கத்தேவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கேற்றார். தமது பேச்சாற்றலால் ஆங்கில ஆட்சிக்கு எதிராக மக்களிடம் பெரும் எழுச்சியை ஏற்படுத்தினார். மேடைகளில் அவர் ஆற்றிய வீர உரையைக் கேட்ட மக்கள் ஆங்கில ஆட்சிக்கு எதிராக வீறுகொண்டு எழுந்தனர். அதனால் அச்சமடைந்த ஆங்கில அரசு பலமுறை அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது. மேலும், வாய்ப்பூட்டுச் சட்டம் மூலம் மேடைகளில் அரசியல் பேசக்கூடாது என்று அவருக்குத் தடை விதித்தது. வடஇந்தியாவில் வாய்ப்பூட்டுச் சட்டத்தின்படி பேசத் தடை விதிக்கப்பட்ட தலைவர் பாலகங்காதர திலகர். அவரைப்போலவே தென்னாட்டில் அச்சட்டத்திற்கு ஆட்பட்ட தலைவர் முத்துராமலிங்கத்தேவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவரது விடுதலை வேட்கையை அறிந்த திரு. வி. கலியாணசுந்தரனார் தேசியம் காத்த செம்மல் என்று பாராட்டியுள்ளார்.

நேதாஜியுடன் தொடர்பு

வங்கச்சிங்கம் என்று போற்றப்பட்ட நேதாஜி சுபாஷ் சந்திரபோசுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவரைத் தமது அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார். முத்துராமலிங்கத்தேவரின் அழைப்பை ஏற்று பொ.ஆ. (கி.பி.) 1939ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் ஆறாம் நாள் நேதாஜி மதுரைக்கு வருகை தந்தார். நேதாஜி தொடங்கிய இந்திய தேசிய இராணுவத்தில் முத்துராமலிங்கத்தேவரின் முயற்சியால் ஏராளமான தமிழர்கள் இணைந்தனர். விடுதலைக்குப்பின் நேதாஜி என்னும் பெயரில் வார இதழ் ஒன்றையும் நடத்தினார்.

பேச்சாற்றல்

தமது பேச்சாற்றலால் அனைவரையும் கவர்ந்தவர் முத்துராமலிங்கத்தேவர். அவர் முதன் முதலில் சாயல்குடி என்னும் ஊரில் விவேகானந்தரின் பெருமை என்னும் தலைப்பில் மூன்று மணிநேரம் உரையாற்றினார். அந்தக் கூட்டத்தில் பெருந்தலைவர்

தெரிந்து தெளிவோம்

பசும்பொன்னில் உள்ள முத்துராமலிங்கத்தேவர் நினைவிடத்தில் அவர் தோன்றி மறைந்த அக்டோபர் முப்பதாம் நாள் ஆண்டுதோறும் தமிழக அரசின் சார்பில் அரசு விழா எடுக்கப்படுகிறது. தமிழகச் சட்டமன்றத்தில் அவரது திருவுருவப்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் அரசு சார்பாகச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. இந்திய நாடளுமன்ற வளாகத்திலும் சிலை வைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசால் 1995 இல் தபால் தலை வெளியிடப்பட்டது.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 52 28/01/2025 15:27:26

நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர்

முத்துராமலிங்கத்தேவரின் வீரம்மிக்க பேச்சு விடுதலைப் போருக்கு மிகவும் உதவும்' என்று காமராசர் மகிழ்ந்தார்.

மேலும், தலைவர்கள் பலர் முத்துராமலிங்கத்தேவரின் பேச்சாற்றலைப் பாராட்டியுள்ளனர். 'தென்னாட்டுச் சிங்கம் என்று தேவரைச் சொல்லுகிறார்களே, அது சாலப்பொருந்தும் என அவரது தோற்றத்தைப் பார்த்த உடனேயே நினைத்தேன். அவர் பேசத் தொடங்கியதும் சிங்கத்தின் முழக்கம் போலவே இருந்தது' என்று அறிஞர் அண்ணாவும் அவரைப் புகழ்ந்துரைத்துள்ளார். 'முத்துராமலிங்கத்தேவர் பேச்சு உள்ளத்தில் இருந்து வெளிவருகிறது; உதடுகளிலிருந்து அல்ல. உள்ளத்தால் எதிலும் பற்றற்று உண்மையெனப் பட்டதை மறைக்காமல் அப்படியே பேசிவிடுவது அவர் வழக்கம்' என்று மூதறிஞர் இராஜாஜி பாராட்டியுள்ளார். பாராளுமன்றத்தில் இவர் ஆங்கிலத்தில் பேசிய பேச்சு வெள்ளையர் காலத்தில் விட்டல் பாய், வல்லபபாய் பட்டேல் போன்ற மேதைகள் பேசிய பேச்சைப் போல் இருந்ததாக வடஇந்திய இதழ்கள் பாராட்டின. அவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது சட்டமன்றத்தில் ஆற்றிய உரைகளை அனைவரும் பாராட்டினர்.

தேர்தல் வெற்றிகள்

மக்களின் பேராதரவு பெற்ற தலைவராக விளங்கியவர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர். 1937 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் இராமநாதபுரம் அரசர் சண்முக ராஜேஸ்வர சேதுபதியை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அப்போது இலண்டனில் பாரிஸ்டருக்குப் படித்துவந்த தோழர் கே. டி. கே. தங்கமணி, 'இந்தியத் தேர்தலில் இராமநாதபுரம் மன்னரை எதிர்த்துப் போட்டியிட்ட தேவர் அவர்களின் வெற்றியையும் பொப்பிலி அரசரை எதிர்த்துப் போட்டியிட்ட வி.வி.கிரி அவர்களின் வெற்றியையுமே இந்திய மாணவர்கள் எதிர்பார்த்திருந்தோம்' எனக் குறிப்பிட்டிருந்தார். 1946 இல் போட்டியின்றி வெற்றிபெற்றார். 1952, 1957 ஆகிய ஆண்டுகளில் நடந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு இரண்டிலும் வெற்றி பெற்றார். 1962 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் உடல்நலக்குறைவு காரணமாக, பரப்புரை செய்ய இயலாதபோதிலும் தேர்தலில் வெற்றிபெற்றார்.

குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாடு

ஆங்கில ஆட்சியில் மக்களை ஒடுக்குவதற்காகக் கொண்டு வரப்பட்டது குற்றப்பரம்பரைச் சட்டம் ஆகும். பிறப்பாலேயே ஒருவரைக் குற்றவாளியாகக் கருதும் அச்சட்டத்தை நீக்குவதற்காக மக்களைத் திரட்டிப் பல்வேறு போராட்டங்களை நடத்தினார் முத்துராமலிங்கத்தேவர். 1934 ஆம் ஆண்டு மே 12, 13 ஆகிய தேதிகளில் கமுதியில் குற்றப்பரம்பரைச் சட்ட எதிர்ப்பு மாநாட்டை நடத்தினார். அவரது தொடர் போராட்டத்தால் 1948 ஆம் ஆண்டு அச்சட்டம் நீக்கப்பட்டது.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 53 28/01/2025 15:27:26

ஆலய நுழைவுப் போராட்டம்

அக்காலத்தில் மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்குள் செல்ல ஒரு சாராருக்குத் தடை இருந்தது. அத்தடையை எதிர்த்து 1939ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் எட்டாம் நாள் மதுரை வைத்தியநாத ஐயர் கோவில் நுழைவுப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டார். அதனை எதிர்த்து அர்ச்சகர்கள் ஆலயப்பணியைப் புறக்கணித்தனர். தேவர் திருச்சுழியில் இருந்து அர்ச்சகர்கள் இருவரை அழைத்துவந்து ஆலய நுழைவுப் போராட்டத்தை வெற்றிபெறச் செய்தார்.

தெரிந்து தெளிவோம்

முத்துராமலிங்கத்தேவரின் சிறப்புப் பெயர்கள்

தேசியம் காத்த செம்மல், வித்யா பாஸ்கர், பிரவசன கேசரி, சன்மார்க்க சண்டமாருதம், இந்து புத்தசமய மேதை.

விவசாயிகள் தோழர்

இவர் ஜமீன் விவசாயிகள் சங்கம் ஏற்படுத்தி விவசாயிகள் துயர்துடைக்கப் பாடுபட்டார். உழுபவர்களுக்கே நிலம் என்றார்; தமக்குச் சொந்தமாக 31 சிற்றூர்களில் இருந்த விளைநிலங்களைக் குத்தகை இல்லாமல் உழுபவர்க்கே பங்கிட்டுக் கொடுத்தார்; அவற்றை ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அளித்து மகிழ்ந்தார்.

கூட்டுறவுச் சிந்தனையாளர்

கமுதியில் வியாபாரிகள் விவசாய உற்பத்திப் பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்கியதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். பாரதமாதா கூட்டுறவுப் பண்டகசாலையை ஏற்படுத்தி விவசாயிகளின் விளைபொருள்களுக்குச் சரியான விலை கிடைக்கச்செய்தார்.

தொழிலாளர் தலைவர்

1938 காலக்கட்டத்தில் மதுரையில் 23 தொழிலாளர் சங்கங்களின் தலைவராகத் தேவர் திகழ்ந்தார். மதுரையிலிருந்த நூற்பு ஆலை ஒன்றில் வேலைசெய்த தொழிலாளர்களின் உரிமைக்காகத் தோழர் ப. ஜீவானந்தத்துடன் இணைந்து 1938ஆம் ஆண்டு போராட்டம் நடத்தினார். அதற்காக ஏழு திங்கள் சிறைத் தண்டனை பெற்றார். உழவர்களின் நலன் காக்க இராஜபாளையத்தில் மிகப் பெரிய அளவிலான மாநாடு ஒன்றை நடத்தினார். பெண்தொழிலாளர்களுக்கு மகப்பேறு காலத்தில் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வேண்டும் என்று போராடினார்.

சிறை வாசம்

சுதந்திரப் போராட்டத்தில் மிகத்தீவிரமாக ஈடுபட்டதால் கைது செய்யப்பட்டு அலிப்பூர், அமராவதி, தாமோ, கல்கத்தா, சென்னை, வேலூர் முதலிய சிறைகளில் சிறைவைக்கப்பட்டிருந்தார். இரண்டாம் உலகப்போர் சமயத்தில் மத்திய பிரதேசத்தின் தாமோ என்னும் நகரில் உள்ள இராணுவச்சிறையில் அடைக்கப்பட்டுப் போர் முடிந்தபிறகுதான் விடுதலை செய்யப்பட்டார்.

தெரிந்து தெளிவோம்

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் இம்மண்ணுலகில் வாழ்ந்த நாள்கள் 20,075. சுதந்திரப் போராட்டத்திற்காகச் சிறையில் கழித்த நாள்கள் 4000. தம் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பங்கினைச் சிறையில் கழித்த தியாகச் செம்மல் முத்துராமலிங்கத்தேவர் ஆவார்.

பெண்களைத் தெய்வமாக மதித்துப் போற்றியவர்

தேவர் 1936, 1955 ஆகிய ஆண்டுகளில் இரண்டுமுறை பர்மா சென்றிருந்தார். பர்மாவில் புத்த பிட்சுகளில் உயர்ந்தவர்களுக்குப்

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 54 28/01/2025 15:27:26

பெண்கள் தங்கள் கூந்தலை நடைபாதையாக விரித்து வரவேற்பு அளிப்பது வழக்கம். தேவர் பர்மா சென்றிருந்தபோது அவருக்கும் அத்தகைய வரவேற்பு அளிக்க முன்வந்தனர். "இது பெண்களை இழிவுபடுத்துவதாக உள்ளது" என்று கூறி, அதனை ஏற்க மறுத்துவிட்டார்.

நாடு போற்றும் நன்மகன்

பொதுத்தொண்டுக்கு இடையூறாக இருக்கும் எனக் கருதித் திருமணம் செய்துகொள்ளாமல் தியாக வாழ்வு வாழ்ந்தார் முத்துராமலிங்கத்தேவர். இவர் விவேகானந்தரின் தூதராக, நேதாஜியின் தளபதியாக, சத்தியசீலராக, முருகபக்தராக, ஆன்மிகப் புத்திரராக, தமிழ்பாடும் சித்தராக, தென்பாண்டிச் சீமையின் முடிசூடா மன்னராக, நீதிவழுவா நேர்மையாளராக, புலமையில் கபிலராக, வலிமையில் கரிகாலனாக, கொடையில் கர்ணனாக, பக்தியில் பரமஹம்சராக, இந்தியத் தாயின் நன்மகனாக விளங்கினார்.

இத்தகைய பெருமை வாய்ந்த முத்துராமலிங்கத்தேவர் பொ.ஆ. (கி.பி.) 1963ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் முப்பதாம் நாளில் இவ்வுலகை விட்டு நீங்கி மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்றார்.

கற்பவை கற்றபின்

நாட்டுக்கு உழைத்த சிறந்த பிற தலைவர்களைப் பற்றிய செய்திகளைத் திரட்டி எழுதுக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. முத்துராமலிங்கத்தேவர் முதன்முதலில் உரையாற்றிய இடம் ______.

   அ) தூத்துக்குடி ஆ) காரைக்குடி இ) சாயல்குடி ஈ) மன்னார்குடி

2. முத்துராமலிங்கத்தேவர் நடத்திய இதழின் பெயர் _____.

   அ) இராஜாஜி ஆ) நேதாஜி இ) காந்திஜி ஈ) நேருஜி

3. தேசியம் காத்த செம்மல் எனப் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டியவர் _____.

   அ) இராஜாஜி ஆ) பெரியார் இ) திரு.வி.க. ஈ) நேதாஜி

குறுவினா

1. முத்துராமலிங்கத்தேவரைப் பாராட்டிப் பெரியார் கூறியது யாது?
2. முத்துராமலிங்கத்தேவரின் பேச்சுக்கு வாய்ப்பூட்டுச் சட்டத்தின் மூலம் தடைவிதிக்கப்படக் காரணம் யாது?
3. முத்துராமலிங்கத்தேவர் பெற்றிருந்த பல்துறை ஆற்றலைப் பற்றி எழுதுக.

சிறு வினா

1. நேதாஜியுடன் முத்துராமலிங்கத்தேவர் கொண்ட தொடர்புபற்றி எழுதுக.
2. தொழிலாளர் நலனுக்காக முத்துராமலிங்கத்தேவர் செய்த தொண்டுகள் யாவை?

சிந்தனை வினா

சிறந்த தலைவருக்குரிய பண்புகள் எவை என நீங்கள் கருதுகிறீர்கள்?

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 55 28/01/2025 15:27:26

விரிவானம்

இயல் மூன்று

கப்பலோட்டிய தமிழர்

நுழையும்முன்

தென்னாட்டில் உள்ள தூத்துக்குடி அந்நாளில் எந்நாட்டவரும் அறிந்த துறைமுக நகரம். அந்நகரின் பெருமையைத் தம் பெருமையாக்கிக் கொண்டவர் சிதம்பரனார். அவர் தன்னலம் துறந்த தனிப்பெரும் தொண்டர். இந்தியக் கடலாட்சி எமதே எனக் கருதி இறுமாந்திருந்த ஆங்கிலேயர் பொறி கலங்கி, நெறிமயங்கக் கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனார். நாட்டிலே சுதந்திர உணர்ச்சியை ஊட்டியதற்காக அவரைச் சிறைக்கோட்டத்தில் மாட்டி மகிழ்ந்தது ஆங்கில அரசாங்கம். சிறைவாசம் முடிந்த பின்னர்த் தூத்துக்குடிக்குத் திரும்பினார் சிதம்பரனார். ஒரு நாள் மாலைப்பொழுது துறைமுகத்தின் அருகே உலாவச் சென்றார். பழைய நினைவுகள் எல்லாம் அவர் மனத்திலே படர்ந்தன. அக்கடற்கரையில் நின்று அவர் பேசியிருந்தால் என்ன பேசியிருப்பார்? இதோ அவர் வாயாலேயே கேட்போம்!



"தென்னாட்டுத் துறைமுகமே! முந்நூறு ஆண்டுகளாக நீயே இம்முத்துக் கரையில் முதன்மை பெற்று விளங்குகின்றாய்! முன்னாளில் வளமுற்றிருந்த கொற்கைப் பெருந்துறையின் வழித்தோன்றல் நீயே என்று உணர்ந்து உன்னை வணங்குகின்றேன்; வாழ்த்துகின்றேன். ஆயினும், அக்காலத் துறைமுகத்தின் மாட்சியையும் இக்காலத்தில் காணும் காட்சியையும் நினைத்துப் பார்க்கும்பொழுது என் நெஞ்சம் குமுறுகின்றதே!

பார் அறிந்த கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீனக்கொடி உயர்ந்து பறந்தது. கொற்கைக்கடல் முத்துவளம் கொழித்தது. பழங்குடிகளாகிய பரதவர் மரக்கல வணிகத்தால் வளம்பெற்று மாடமாளிகையில் வாழ்ந்தார்கள். இது, சென்ற காலத்தின் சிறப்பு. இன்று, மீனக்கொடி எங்கே? ஆங்கில நாட்டுக் கொடியன்றோ இங்குப் பறக்கின்றது? பரங்கியர் கப்பலன்றோ எங்கும் பரந்து திரிகின்றது? கொள்ளை இலாபம் அடைகின்ற வெள்ளையர் கப்பலில், கூலி வேலை செய்கின்றனர் நம் நாட்டு மக்கள்! சொந்த நாட்டிலே வந்தவருக்கு அடிமைசெய்து வயிறு வளர்ப்பது ஒரு வாழ்வாகுமா? வசையொழிய வாழ்வாரே வாழ்வார் என்ற வள்ளுவர் வாய்மொழியை மறக்கலாமா?

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 56 28/01/2025 15:27:26

வளமார்ந்த துறைமுகமே! இந்த வசையை ஒழிப்பதற்காக இந்நகரில் சுதேசக் கப்பல் கம்பெனி ஒன்று உருவாயிற்று. பாரதநாட்டுச் செல்வரும் அறிஞரும் அந்தக் கம்பெனியில் பங்குகொண்டார்கள். பழங்காலப் பாண்டியரைப் போல் மதுரை மாநகரிலே தமிழ்ச் சங்கம் அமைத்துப் புலவர் பாடும் புகழ் உடையவராய் விளங்கிய பாண்டித்துரையார் அக்கம்பெனியின் தலைவர் ஆனார். அதன் செயலாளனாக அமைந்து பணி செய்யும் பேறு எனக்குக் கிடைத்தது. கம்பெனியார் வாங்கிய சுதேசக் கப்பல் உன் துறைமுகத்தை வந்தடைந்தது. வெள்ளோட்டம் பார்ப்பதற்காக அக்கப்பல் இங்கிருந்து கொழும்புத் துறையை நோக்கிப் புறப்பட்ட நாளில், இன்ப வெள்ளம் என் உள்ளத்திலே பொங்கி எழுந்தது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

வாணிக மாமணியே! அன்றுமுதல் சுதேசக் கப்பல் வாணிகம் வளர்ந்தது; வெள்ளையர்களது வாணிகம் தளர்ந்தது. அதுகண்டு அவர்களது உள்ளம் எரிந்தது. வெறுக்கத்தக்க சூழ்ச்சிகளை அன்னார் கையாளத் தலைப்பட்டனர்; சுதேசக் கம்பெனி வேலையினின்றும் நான் விலகிக்கொண்டால் நூறாயிரம் ரூபாய் கையடக்கம் தருவதாக மறைமுகமாகக் கூறினர். எனக்கு உற்ற துணையாக நின்று ஊக்கம் தந்த நண்பர்களைப் பலவாறு பயமுறுத்தினர்; இவையெல்லாம் பயனற்று ஒழிந்த நிலையிலே அடக்குமுறையைக் கையாளக் கருதி அரசாங்கத்தின் உதவியை நாடினர்.

பரங்கியர் ஆளும் துறையே! ஆங்கில அரசாங்கம் சர்வ வல்லமையுடையது என்றும், அதை அசைக்க எவராலும் ஆகாதென்றும் அப்போது பொதுமக்கள் எண்ணியிருந்தார்கள். அதனால் அடிமைத்தனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இந்நாட்டு மக்களிடையே வளர்ந்தது. துரைத்தனத்தார் என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாமல், 'சார், சார்' என்று சலாமிட்டும், 'புத்தி, புத்தி' என்று வாய் பொத்திச் 'சரி, சரி' எனச் சம்மதித்துத் தாளம்போடும் போலி அறிஞர்கள், பட்டங்களும் பதவிகளும் பெற்று உயர்ந்தார்கள். இத்தகைய சூழ்நிலையிலே எழுந்தது சுதந்தர நாதம்!

வந்தே மாதரம் என்ற சுதேச மந்திரம் வங்க நாட்டிலே பிறந்தது; காட்டுக்கனல் போல் எங்கும் பரவிற்று. சுதந்தரம் எனது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவேன் என்று வடநாட்டிலே மார்தட்டி நின்றார் மராட்டிய வீரர் ஒருவர். அவரே பாரதநாடு போற்றும் பாலகங்காதர திலகர். தென்னாட்டிலே தோன்றினார் நாவீறுடைய நண்பர் பாரதியார். அவர் அஞ்சாத நெஞ்சினர். செஞ்சொற்கவிஞர்; வந்தே மாதரம் என்போம், எங்கள் மாநிலத்தாயை வணங்குதும் என்போம் என்று அழகிய பாட்டிசைத்து, நாட்டிலே ஆர்வத்தைத் தட்டி எழுப்பினார்.

புதுமைகண்ட துறைமுகமே! அந்நாளில் 'வந்தேமாதரம்' என்றால் வந்தது தொல்லை. அந்த வாசகத்தில் ஒரு வஞ்சகம் இருப்பதாக ஆங்கில அரசாங்கம் கருதிற்று. பொதுக்கூட்டங்களிலும் தொழிலாளர் கூட்டங்களிலும் நான் பேசும்பொழுது

தெரிந்து தெளிவோம்

'சிதம்பரனாரின் பிரசங்கத்தையும், பாரதியாரின் பாட்டையும் கேட்டால் செத்த பிணம் உயிர்பெற்று எழும். புரட்சி ஓங்கும். அடிமைப்பட்ட நாடு ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்'

– சிதம்பரனாருக்கு இரட்டை வாழ்நாள் சிறைத்தண்டனை வழங்கிய நீதிபதி பின்ஹேவின் கூற்று.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 57 28/01/2025 15:27:26

'வந்தே மாதர'த்தை அழுத்தமாகச் சொல்வது வழக்கம். அதைக்கேட்டு நாட்டு மக்கள் ஊக்கமுற்றார்கள்; உணர்ச்சி பெற்றார்கள். உள்ளதைச் சொன்னால் கள்ளமுடையவர் உள்ளம் எரியும் அல்லவா? எரிவுற்ற அரசாங்கம் என்னை எதிரியாகக் கருதிற்று; என் மீது பல வகையான குற்றம் சாட்டிற்று. நாட்டின் அமைதியை நான் கெடுத்தேனாம்! நல்ல முதலாளிமாருக்குத் தொல்லை கொடுத்தேனாம்! வெள்ளையர் மீது வெறுப்பை ஊட்டினேனாம்! வீரசுதந்திரம் பெற வழிகாட்டினேனாம்!

சிறையில் சிதம்பரனார் இழுத்த செக்கு

வெள்ளையர் கோர்ட்டிலே இக்குற்ற விசாரணை விறுவிறுப்பாக நடந்தது. இரட்டைத் தீவாந்தர தண்டனை எனக்கு விதிக்கப்பட்டது. அப்பீல் கோர்ட்டிலே சிறைத் தண்டனையாக மாறிற்று அத்தீர்ப்பு. ஆறாண்டு கோவைச் சிறையிலும் கண்ணனூர்ச் சிறையிலும் கொடும்பணி செய்தேன். என் உடல் சலித்தது. ஆயினும், உள்ளம் ஒருநாளும் தளர்ந்ததில்லை; சிறைச்சாலையை தவச்சாலையாக நான் கருதினேன்; கைவருந்த மெய் வருந்தச் செய்த பணிகள் எல்லாம் தாய்நாட்டின் விடுதலைக்காகப் புரிந்த அருந்தவம் என்று எண்ணி உள்ளம் மகிழ்ந்தேன்.

செல்வச் செழுந்துறையே! சிறைச்சாலையில் என்னைக் கண்காணித்தவர் பலர். கடும்பணி இட்டவர் பலர். அவரை நான் எந்நாளும் வெறுத்ததில்லை. ஆனால், முறைதவறி நடந்தவர்களை எதிர்த்தேன். வரைதவறிப் பேசியவர்களை வாயால் அடக்கினேன்.

ஒரு நாள் மாலைப்பொழுது; உடல் நலிந்து, உள்ளம் தளர்ந்து சிறைக்கூடத்தில் உட்கார்ந்திருந்தேன். அங்கே வந்தான் ஒரு ஜெயிலர்; அதிகாரத் தோரணையில் நீட்டி நிமிர்ந்து நின்றுகொண்டு எனக்குச் சில புத்திமதிகளைச் சொல்லத் தொடங்கினான். அப்போது என் மனத்தில் கோபம் பொங்கி எழுந்தது. 'அடே மடையா! நீயா எனக்குப் புத்திமதி சொல்பவன்? மூடு வாயை! உனக்கும் உன் அப்பனுக்கும் புத்தி சொல்வேன் நான். உன்னுடைய கவர்னருக்கும் மன்னருக்கும் புத்தி சொல்வேன் நான்' என்று வேகமுறப் பேசினேன். மானமிழந்து வாயிலிலிருந்து மறைந்தான் ஜெயிலர்.

தமிழ்ப் பெருந்துறையே! உன் தாழ்விலும் வாழ்விலும் எந்த நாளிலும் என் தமிழ்த் தாயை நான் மறந்தறியேன். இந்த நகரத்தில் வக்கீல் வேலை பார்த்து வளமுற வாழ்ந்த நாளில் வள்ளல் பாண்டித்துரையோடு உறவு கொண்டு தமிழ் நூல்களைக் கற்றேன். அதனால் நான் அடைந்த நன்மைக்கு ஓர் அளவில்லை. சிறைச்சாலையில் செக்கிழுத்த துயரத்தை மாற்றியது என் செந்தமிழன்றோ? கைத்தோல் உரியக் கடும்பணி புரிந்தபோது என் கண்ணீரை மாற்றியது கன்னித் தமிழன்றோ?

தொல்காப்பியத்தைப் படித்துப் படித்து என் தொல்லையெல்லாம் மறந்தேன். இன்னிலையைக் கற்று என் இன்னல்களையெல்லாம் வென்றேன். ஆங்கில மொழியில்

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 58 28/01/2025 15:27:26

ஆலன் என்பவர் இயற்றிய அறிவு நூல்களில் ஒன்றை மனம் போல் வாழ்வு என்று தமிழில் மொழிபெயர்த்தேன். உயர்ந்த நூல்களில் கண்ட உண்மைகளை இளைஞரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு மெய்யறிவு, மெய்யறம் என்ற சிறு நூல்களை இயற்றினேன். இவற்றை என் தமிழ்த்தாயின் திருவடிகளில் கையுறையாக வைத்தேன். சிறையில் இருந்து இயற்றிய நூல்களையும் உவந்து ஏற்றுக்கொள்ளுமாறு செந்தமிழ்த்தாயின் திருவருளை வேண்டுகிறேன்.

வருங்காலப் பெருவாழ்வே! காலம் கடிது சென்றது. என் சிறைவாழ்வு முடிந்தது. இந்நகரை வந்தடைந்தேன். என் அருமைக் குழந்தைகளைக் கண்டு ஆனந்தமுற்றேன். ஆயினும் என் ஆசைக்குழந்தையை – தேசக் கப்பலை இத்துறைமுகத்தில் காணாது ஆறாத் துயருற்றேன். 'பட்ட பாடெல்லாம் பயனற்றுப் போயிற்றே' என்று பரிதவித்தேன். 'என்று வருமோ நற்காலம்' என்று ஏங்கினேன். இன்று இல்லாவிட்டாலும் என்றேனும் சுதந்தரம் வந்தே தீரும். வீரசுதந்தர வெள்ளம் புறப்பட்டு விட்டது. அதைத் தடுத்து நிறுத்த யாரால் ஆகும் பாரதநாட்டிலே?

பாயக் காண்பது சுதந்திரவெள்ளம்
பணியக் காண்பது வெள்ளையர் உள்ளம்
என்று நாம் பாடும் நாள் எந்நாளோ?

என்று உருக்கமாகப் பேசிக் கடற்கரையை விட்டு அகன்றார் வீர சிதம்பரனார்.

நூல் வெளி



இரா.பி.சேது தமிழறிஞர், எழுத்தாளர், வழக்குரைஞர், மேடைப் பேச்சாளர் எனப் பன்முகத் திறன் பெற்றவர். இவரைச் சொல்லின் செல்வர் எனப் போற்றுவர். செய்யுளுக்கே உரிய எதுகை, மோனை என்பவற்றை உரைநடைக்குள் கொண்டு வந்தவர் இவரே என்பர். இவரது தமிழின்பம் என்னும் நூல் இந்திய அரசின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற முதல் நூல் ஆகும். ஆற்றங்கரையினிலே, கடற்கரையினிலே, தமிழ் விருந்து, தமிழகம்– ஊரும் பேரும், மேடைப்பேச்சு உள்ளிட்ட பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

வ.உ. சிதம்பரனார் பேசுவதாக அமைந்த நம் பாடப்பகுதி கடற்கரையினிலே என்னும் நூலிலிருந்து எடுத்தாளப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்

பாரதியார், கொடிகாத்த குமரன் போன்ற விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவராக உங்களைக் கற்பனை செய்து கொண்டு வகுப்பில் உரையாற்றுக.

மதிப்பீடு

வ.உ. சிதம்பரனாரின் உரையை வாழ்க்கை வரலாறாகச் சுருக்கி எழுதுக.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 59 28/01/2025 15:27:27

கற்கண்டு

இயல் மூன்று

ஓரெழுத்து ஒருமொழி, பகுபதம், பகாப்பதம்

ஓரெழுத்து ஒருமொழி

ஈ, பூ, கை ஆகிய எழுத்துகளைக் கவனியுங்கள்.

இவை ஒவ்வொன்றிற்கும் பொருள் உண்டு. இவ்வாறு ஓர் எழுத்தே பொருள் தரும் சொல்லாக அமைவதை ஓரெழுத்து ஒரு மொழி என்பர்.

நன்னூல் என்னும் இலக்கண நூலை எழுதிய பவணந்தி முனிவர் தமிழில் நாற்பத்திரண்டு ஓரெழுத்து ஒருமொழிகள் உள்ளன எனக் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் நொ, து ஆகிய இரண்டு சொற்களைத்தவிர ஏனைய நாற்பது சொற்களும் நெடில் எழுத்துகளாக அமைந்தவை ஆகும்.

தெரிந்து தெளிவோம் — ஓரெழுத்து ஒரு மொழிகளும் அவற்றின் பொருளும்

1. ஆ– பசு 2. ஈ– கொடு 3. ஊ– இறைச்சி 4. ஏ– அம்பு 5. ஐ– தலைவன் 6. ஓ – மதகுநீர் தாங்கும் பலகை 7. கா– சோலை 8. கூ– பூமி 9. கை– ஒழுக்கம் 10. கோ–அரசன் 11. சா– இறந்துபோ 12. சீ– இகழ்ச்சி 13. சே– உயர்வு 14. சோ– மதில் 15. தா– கொடு 16. தீ– நெருப்பு 17. தூ– தூய்மை 18. தே– கடவுள் 19. தை– தைத்தல் 20. நா– நாவு 21. நீ– முன்னிலை ஒருமை 22. நே– அன்பு 23. நை– இழிவு 24. நோ– வறுமை 25. பா– பாடல் 26. பூ– மலர் 27. பே – மேகம் 28. பை– இளமை 29. போ– செல் 30. மா– மாமரம் 31. மீ– வான் 32. மூ – மூப்பு 33. மே– அன்பு 34. மை– அஞ்சனம் 35. மோ– மோத்தல் 36. யா– அகலம் 37. வா– அழைத்தல் 38. வீ– மலர் 39. வை– புல் 40. வௌ– கவர் 41. நொ– நோய் 42. து– உண் .

ஆ, ஈ, கை, சீ, தா, தீ, தை, நா, நீ, பா, பூ, பை, போ, மா, மை, வா, வை ஆகிய 17 ஓரெழுத்துச் சொற்கள் மட்டுமே தற்காலத்தில் பெருமளவு வழக்கில் உள்ளன.

பகுபதம்

வேலன், படித்தான் ஆகிய சொற்களைக் கவனியுங்கள்.

வேலன் என்னும் சொல்லை வேல் + அன் எனப் பிரிக்கலாம்.

படித்தான் என்னும் சொல்லை படி + த் + த் + ஆன் எனப் பிரிக்கலாம்.

இவ்வாறு சிறுசிறு உறுப்புகளாகப் பிரிக்கும் வகையில் அமையும் சொற்களைப் பகுபதங்கள் என்பர். பிரிக்கப்படும் உறுப்புகளைப் பகுபத உறுப்புகள் எனக் குறிப்பிடுவர்.

பெயர்ப்பகுபதம்

பகுபதமாக அமையும் பெயர்ச்சொல் பெயர்ப்பகுபதம் ஆகும். இதனை, பொருள், இடம், காலம், சினை, பண்பு, தொழில் என ஆறு வகைப்படுத்துவர்.

(எ.கா.)
1. பொருள் – பொன்னன் (பொன் + அன்)
2. இடம் – நாடன் (நாடு + அன்)
3. காலம் – சித்திரையான் (சித்திரை + ஆன்)
4. சினை – கண்ணன் (கண் + அன்)
5. பண்பு – இனியன் (இனிமை + அன்)
6. தொழில் – உழவன் (உழவு + அன்)

வினைப்பகுபதம்

பகுபதமாக அமையும் வினைச்சொல் வினைப்பகுபதம் ஆகும்.

(எ.கா.) உண்கின்றான் – உண் + கின்று + ஆன்

பகுபத உறுப்புகள்

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும். அவை பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம் ஆகியவையாகும்.

- பகுபதத்தின் முதலில் அமைந்து முதன்மையான பொருளைத் தருவது பகுதி ஆகும். வினைப்பகுபதத்தின் பகுதி கட்டளையாகவே அமையும்.
- பகுபதத்தின் இறுதியில் அமைவது விகுதி. இது திணை, பால், எண், இடம் ஆகியவற்றையோ முற்று, எச்சம் ஆகியவற்றையோ காட்டும்.
- பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் அமைந்து காலம் அல்லது எதிர்மறையைப் பொருளை உணர்த்துவது இடைநிலை ஆகும்.
- பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே இடம்பெறும் மெய்யெழுத்து சந்தி எனப்படும்.
- பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இடம்பெறும் அசைச்சொல் சாரியை எனப்படும்.
- பகுதி, சந்தி, இடைநிலை முதலியவற்றில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும்.

(எ.கா.) வந்தனன் – வா(வ) + த்(ந்) + த் + அன் + அன்

வா – பகுதி.
இது வ எனக் குறுகி இருப்பது விகாரம்

த் – சந்தி.
இது ந் எனத் திரிந்து இருப்பது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி.

காணலள் – காண் + அல் + அள்

காண் – பகுதி.

அல் – எதிர்மறை இடைநிலை

அள் – பெண்பால் வினைமுற்று விகுதி.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 61 28/01/2025 15:27:27

பகாப்பதம்

மரம், கழனி, உண், எழுது ஆகிய சொற்களைக் கவனியுங்கள். இவற்றை மேலும் சிறிய உறுப்புகளாகப் பிரிக்க முடியாதல்லவா? இவ்வாறு பகுபத உறுப்புகளாகப் பிரிக்கமுடியாத சொல் பகாப்பதம் எனப்படும். இவை அடிச்சொல் அல்லது வேர்ச்சொல்லாக இருக்கும்.

பெயர், வினை, இடை, உரி ஆகிய நான்கு வகைச் சொற்களிலும் பகாப்பதங்கள் உண்டு.

(எ.கா.) பெயர்ப் பகாப்பதம் – நிலம், நீர், நெருப்பு, காற்று.

வினைப் பகாப்பதம் – நட, வா, படி, வாழ்.

இடைப் பகாப்பதம் – மன், கொல், தில், போல்.

உரிப் பகாப்பதம் – உறு, தவ, நனி, கழி.

கற்பவை கற்றபின்

1. பாடப்பகுதியில் இடம்பெற்ற சொற்களில் பகுபதம், பகாப்பதம் ஆகியவற்றைக் கண்டறிந்து தனித்தனியே தொகுக்க.
2. உங்கள் வகுப்பு மாணவ-மாணவிகளின் பெயர்களைப் பகுபதம், பகாப்பதம் என வகைப்படுத்துக.

மதிப்பீடு

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. நன்னூலின்படி தமிழிலுள்ள ஓரெழுத்து ஒருமொழிகளின் எண்ணிக்கை _______.

   அ) 40 ஆ) 42 இ) 44 ஈ) 46

2. 'எழுதினான்' என்பது _______.

   அ) பெயர்ப் பகுபதம் ஆ) வினைப் பகுபதம்

   இ) பெயர்ப் பகாப்பதம் ஈ) வினைப் பகாப்பதம்

3. பெயர்ப்பகுபதம் _______ வகைப்படும்.

   அ) நான்கு ஆ) ஐந்து இ) ஆறு ஈ) ஏழு

4. காலத்தைக் காட்டும் பகுபத உறுப்பு _______.

   அ) பகுதி ஆ) விகுதி இ) இடைநிலை ஈ) சந்தி

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 62 28/01/2025 15:27:27

பொருத்துக.

1. பெயர்ப் பகுபதம் – வாழ்ந்தான்
2. வினைப் பகுபதம் – மன்
3. இடைப் பகாப்பதம் – நனி
4. உரிப் பகாப்பதம் – பெரியார்

சரியான பகுபத உறுப்பை எழுதுக.

போவாள் – போ + வ் + ஆள்

போ – ______________

வ் – ______________

ஆள் – ______________

நடக்கின்றான் – நட + க் + கின்று + ஆன்

நட – ______________

க் – ______________

கின்று – ______________

ஆன் – ______________

பின்வரும் சொற்களைப் பிரித்துப் பகுபத உறுப்புகளை எழுதுக.

1. பார்த்தான் 2. பாடுவார்

குறுவினா

1. ஓரெழுத்து ஒருமொழி என்றால் என்ன?
2. பதத்தின் இருவகைகள் யாவை?
3. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
4. விகுதி எவற்றைக் காட்டும்?
5. பெயர்ப்பகுபதம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

மொழியை ஆள்வோம்!

கேட்க.

பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் பேச்சின் ஒலிப்பதிவைக் கேட்டு மகிழ்க.

கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று பற்றி இரண்டு நிமிடம் பேசுக.

1. தேசியம் காத்த செம்மல்
2. கப்பலோட்டிய தமிழர்

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 63 28/01/2025 15:27:27

அறிந்து பயன்படுத்துவோம்.

பொதுவாக ஒரு தொடர் மூன்று பகுதிகளாக அமையும்.

அவை 1. எழுவாய் 2. பயனிலை 3. செயப்படுபொருள்

ஒரு தொடரில் யார்? எது? எவை? என்னும் வினாக்களுக்கு விடையாக அமைவது எழுவாய்.

(எ.கா.) நீலன் பாடத்தைப் படித்தான்.
பாரி யார்?
புலி ஒரு விலங்கு.

இத்தொடர்களில் நீலன், பாரி, புலி ஆகியன எழுவாய்கள்.

ஒரு தொடரை வினை, வினா, பெயர் ஆகியவற்றுள் ஏதேனும் ஒன்றைக் கொண்டு முடித்து வைப்பது பயனிலை.

(எ.கா.) கரிகாலன் கல்லணையைக் கட்டினான்.
கரிகாலன் யார்?
கரிகாலன் ஒரு மன்னன்.

இத்தொடர்களில் கட்டினான், யார், மன்னன் ஆகியன பயனிலைகள்.

யாரை, எதை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருள்.

(எ.கா.) நான் கவிதையைப் படித்தேன்.
என் புத்தகத்தை எடுத்தது யார்?
நெல்லிக்கனியைத் தந்தவர் அதியமான்.

இத்தொடர்களில் கவிதை, புத்தகம், நெல்லிக்கனி ஆகியன செயப்படு பொருள்கள்.

பின்வரும் தொடர்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளை எடுத்து எழுதுக.

1. வீரர்கள் நாட்டைக் காத்தனர்.
2. பொதுமக்கள் அந்நியத்துணிகளைத் தீயிட்டு எரித்தனர்.
3. கொற்கைத் துறைமுகத்திலே பாண்டியனுடைய மீனக்கொடி பறந்தது.
4. திருக்குறளை எழுதியவர் யார்?
5. கபிலர் குறிஞ்சிப்பாட்டை எழுதிய புலவர்.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகிய மூன்றும் அமையும்படி ஐந்து தொடர்களை எழுதுக.

(எ.கா.) நான் கவிதை எழுதுவேன்.

கீழ்க்காணும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

நான் விரும்பும் தலைவர்.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 64 28/01/2025 15:27:27

மொழியோடு விளையாடு

இடைச்சொல் 'ஐ' சேர்த்துத் தொடரை மீண்டும் எழுதுக.

(எ.கா) வீடு கட்டினான் – வீடு + ஐ + கட்டினான் = வீட்டைக் கட்டினான்

1. கடல் பார்த்தாள் ___________________________________
2. புல் தின்றது ___________________________________
3. கதவு தட்டும் ஓசை ___________________________________
4. பாடல் பாடினாள் ___________________________________
5. அறம் கூறினார் ___________________________________

இரண்டு சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

கண்	அழகு உண்டு	கண்ணழகு	கண்ணுண்டு
மண்			
விண்			
பண்			

அகம் என முடியும் சொற்களை எழுதுக.

(எ.கா.) நூலகம்

1. ___________________________________
2. ___________________________________
3. ___________________________________
4. ___________________________________

கோடிட்ட இடங்களைத் தமிழ் எண் கொண்டு நிரப்புக.

(எ.கா.) திருக்குறள் ௩ பால்களைக் கொண்டது.

1. எனது வயது ___________.
2. நான் படிக்கும் வகுப்பு ___________.
3. தமிழ் இலக்கணம் ___________ வகைப்படும்.
4. திருக்குறளில் ___________ அதிகாரங்கள் உள்ளன.
5. இந்தியா ___________ ஆம் ஆண்டு விடுதலை பெற்றது.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 65 28/01/2025 15:27:27

குறிப்புகளைக் கொண்டு தலைவர்களின் பெயர்களைக் கட்டங்களிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

தி	ரு	ப்	பூ	ர்	கு	ம	ர	ன்
ரு	தா	கா	ன்	க	க்	க	நா	லை
வ	ந்	ம	யா	ர்	டு	ட்	க	ம
ள்	ஜி	ரா	ஜா	யா	ர்	ட	ம்	ன
ளி	ஜா	ச	ர	தி	யா	பொ	மை	ன்
ய	ரா	ர்	னா	ர	ப	ம்	த	சி
ம்	இ	டி	ண்	பா	ர	ம	மி	ற
மை	வா	ஞ்	சி	நா	த	ன்	ழி	ப்
ர்	யா	சி	ச்	நா	லு	வே	ல்	பு

1. மூதறிஞர்
2. வீரமங்கை
3. பாஞ்சாலங்குறிச்சி வீரன்
4. வெள்ளையரை எதிர்த்த தீரன்
5. கொடிகாத்தவர்
6. எளிமையின் இலக்கணம்
7. தில்லையாடியின் பெருமை
8. கப்பலோட்டிய தமிழர்
9. பாட்டுக்கொரு புலவன்
10. விருதுபட்டி வீரர்
11. கள்ளுக்கடை மறியல் பெண்மணி
12. மணியாட்சியின் தியாகி

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்....

1. விடுதலைப் போராட்ட வீரர்களின் வரலாறுகளை அறிந்து போற்றுவேன்.
2. தலைவர்களின் அரிய பண்புகளை உணர்ந்து பின்பற்றுவேன்

படிப்போம்; பயன்படுத்துவோம்!

கதைப்பாடல்	- *Ballad*	பேச்சாற்றல்	- *Elocution*
துணிவு	- *Courage*	ஒற்றுமை	- *Unity*
தியாகம்	- *Sacrifice*	முழக்கம்	- *Slogan*
அரசியல் மேதை	- *Political Genius*	சமத்துவம்	- *Equality*

திருக்குறள்

எளிய உரை – டாக்டர் வ.சுப. மாணிக்கனார்

17. அழுக்காறாமை

1. *ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து
அழுக்காறு இலாத இயல்பு.*
2. *விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லையார் மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின்.*
3. *அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்
பேணாது அழுக்கறுப் பான்.*
4. *அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து.*
5. *அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.*
6. *கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும்.*
7. *அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும்.*
8. *அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்.*
9. *அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.*
10. *அழுக்கற்று அகன்றாரும் இல்லைஅஃது இல்லார்
பெருக்கத்தின் தீர்ந்தாரும் இல்.*

17. அழுக்காறாமை – எளிய உரை

1. மனத்தில் பொறாமை இல்லாத நிலையே
ஒழுக்க நெறியாம் என்று கொள்க.
2. யார்மேலும் பொறாமை இல்லை எனின்
சிறந்த மேன்மை வேறில்லை.
3. தனக்கு நல்வளர்ச்சி வேண்டாம் என்பவனே
மற்றவன் வளர்ச்சிக்குப் பொறாமைப்படுவான்.
4. பொறாமையால் தமக்குத் தீதுவரும் ஆதலின்
பொறாமையால் பிறர்க்குத் தீது செய்யார்.
5. பொறாமையாளரைக் கெடுக்க அதுவே போதும்;
பகைவர் கெடுக்கத் தவறினும் அது தவறாது.
6. கொடுப்பதைக் கண்டு பொறாமைப்படுவனது
சுற்றத்தாரும் உணவுஉடை இன்றி அழிவர்.
7. மனம் சுருங்கிப் பொறாமைப்படுபவனைச்
சீதேவி மூதேவியிடம் ஒப்படைப்பாள்.
8. பொறாமையாகிய பாவம் செல்வம் கெடுத்துத்
தீய வழியிலும் கொண்டுபோய் விடும்.
9. பொறாமைப்படுபவன் உண்மையில் வளர்கிறானா?
நல்லவன் கெடுகிறானா? எண்ணிப்பார்.
10. பொறாமையால் வாழ்வு விரிந்தவரும் இல்லை;
பொறுப்பதால் வளர்ச்சி குறைந்தவரும் இல்லை.

19. புறங்கூறாமை

1. *அறம்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறம்கூறான் என்றல் இனிது.*
2. *அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை.*
3. *புறம்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறம்கூறும் ஆக்கம் தரும்.*
4. *கண்நின்று கண்அறச் சொல்லினும் சொல்லற்க
முன்இன்று பின்நோக்காச் சொல்.*
5. *அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையால் காணப் படும்.*
6. *பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்.*
7. *பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்.*
8. *துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு.*
9. *அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை.*
10. *ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.*

19. புறங்கூறாமை – எளிய உரை

1. ஒருவன் அறத்தைப் பழித்துத் தீமை செய்யினும்
கோள் சொல்லான் என்பது காதுக்கு இனியது.
2. அறம் அழித்துச் செய்யும் தீமையினும் தீது
புறத்தே இகழ்ந்து முன்னே புகழ்வது.
3. கோள்சொல்லி நடித்து உயிர் வாழ்தலினும்
சாவது நல்லது; அறத்தின் பயன் கிடைக்கும்.
4. எதிரே கடுமையாகச் சொல்லினும் சொல்லலாம்;
ஆளில்லாத போது கோள் சொல்லற்க.
5. இவன் நெஞ்சத்தில் நேர்மை இல்லை என்பது
கோள் சொல்வதிலிருந்து கண்டு கொள்ளலாமே?
6. பிறரது குறையை நீதேடிக் கூறின்
உன் பெரிய குறையை மற்றவர் விடுவாரோ?
7. மகிழ்ந்து பேசி நட்புச் செய்யத் தெரியாதவர்
கோள்சொல்லி நண்பரையும் பிரித்து விடுவர்.
8. பழகியவர் குற்றத்தையே தூற்றித் திரிபவர்
பழகாதவரிடம் எப்படி எப்படியோ?
9. போனது பார்த்துப் புறங்கூறுபவனை
உலகம் சுமக்கிறது; அதுவும் ஓர் அறமோ?
10. பிறர்குறை காண்பதுபோல் தங்குறை காணின்
வாழும் உயிர்க்குத் தீது உண்டோ?

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 67 28/01/2025 15:27:27

25. அருள் உடைமை

1. *அருள்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருள்செல்வம்
பூரியார் கண்ணும் உள.*

2. *நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான்
தேரினும் அஃதே துணை.*

3. *அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்.*

4. *மன்னுயிர் ஓம்பி அருள்ஆள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.*

5. *அல்லல் அருள்ஆள்வார்க்கு இல்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி.*

6. *பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.*

7. *அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.*

8. *பொருள்அற்றார் பூப்பர் ஒருகால் அருள்அற்றார்
அற்றார்மற்று ஆதல் அரிது.*

9. *தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.*

10. *வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேல் செல்லும் இடத்து.*

25. அருள் உடைமை – எளிய உரை

1. அருளே செல்வத்துள் சிறந்த செல்வம்;
பொருளோ கயவரிடத்தும் உண்டு.

2. நல்லவழியை ஆராய்ந்து அருள் செய்க
எவ்வகையால் பார்த்தாலும் அருளே துணை.

3. அறியாமையும் துன்பமும் உடைய உலகத்தை
அருள்நெஞ்சம் கொண்டவர் அடைய மாட்டார்.

4. எல்லா உயிர்களையும் பேணும் அருளாளனுக்குத்
தன்னுயிர் பற்றிய கவலை வினை இல்லை.

5. அருளாளர்க்குத் துன்பம் என்பது இல்லை;
காற்றுடன் வளமுடைய இவ்வுலகமே சான்று.

6. அருள் இல்லாமல் கொடுமைகள் செய்பவர்
பொருளிழந்து வாழ்வும் வழுவினார் ஆவர்.

7. பொருளில்லார்க்கு இவ்வுலக வாழ்வு இல்லை;
அருளில்லார்க்கு அவ்வுலக வாழ்வு இல்லை.

8. பொருளில்லார் ஒருநாள் செல்வத்தால் செழிப்பர்;
அருளில்லார் தொலைந்தவரே திரும்ப மீளார்.

9. அருளிலான் அறஞ்செய்தான் என்பது பேதை
இறைவனைக் கண்டான் என்பது போலாம்.

10. உன்னினும் எளியவனை நீ வருத்தும்போது
உன்னினும் வலியவன்முன் உன்னை நினை.

30. வாய்மை

1. *வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமை இலாத சொலல்.*

2. *பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்.*

3. *தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.*

4. *உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்.*

5. *மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.*

6. *பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.*

7. *பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.*

8. *புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்.*

9. *எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.*

10. *யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.*

30. வாய்மை – எளிய உரை

1. வாய்மை என்று போற்றப்படும் பண்பு எது?
சிறிதும் தீமை இல்லாத சொற்களைக் கூறுவது.

2. பொய்யினால் பிறர்க்குத் துயநன்மை வரின்
அப்பொய்யையும் மெய்யாகக் கொள்ளலாம்.

3. உன்நெஞ்சறியப் பொய் கூறாதே; கூறின்
உன் நெஞ்சம் உன்னைச் சுடாதா?

4. மனமறியப் பொய் சொல்லாதவன் உலகத்தார்
மனத்தில் எல்லாம் இருப்பான்.

5. தவமும் தானமும் செய்வதினும் மேலானது
உள்ளத்தோடு உண்மை சொல்வது.

6. பொய்சொல்லாமை பெரும் புகழாம்;
பொய் சொல்லத் தெரியாமை பேரறமாம்.

7. உண்மையை உண்மையாகவே கடைப்பிடித்தால்
பிறஅறங்கள் செய்யவும் வேண்டுமோ?

8. புறத்தூய்மை நீரால் உண்டாகும்; மனத்தூய்மை
பொய் சொல்லாமையால் விளங்கும்.

9. எல்லா ஒளியும் ஒளியல்ல; சான்றோர்க்கு
உண்மை ஒளியே ஒளி.

10. யாம் உண்மையாகக் கண்ட உண்மைகளுள்
வாய்மையினும் நல்லறம் வேறில்லை.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 68 28/01/2025 15:27:28

39. இறைமாட்சி

1. *படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்*
   உடையான் அரசருள் ஏறு.

2. *அஞ்சாமை ஈகை அறிவூஊக்கம் இந்நான்கும்*
   எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.

3. *தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்*
   நீங்கா நிலன்ஆள் பவர்க்கு.

4. *அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா*
   மானம் உடையது அரசு.

5. *இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த*
   வகுத்தலும் வல்லது அரசு.

6. *காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்*
   மீக்கூறும் மன்னன் நிலம்.

7. *இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்*
   தான்கண் டனைத்துஇவ் உலகு.

8. *முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
   இறையென்று வைக்கப் படும்.

9. *செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்*
   கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.

10. *கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்*
    உடையானாம் வேந்தர்க்கு ஒளி.

39. இறைமாட்சி – எளிய உரை

1. படைகுடி உணவு அமைச்சு நட்பு அரண்
   ஆறும் உடையவன் அரசரிற் சிறந்தவன்.

2. அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம்
   நான்கும் வேந்தனுக்கு நன்கு வேண்டும்.

3. காலத்தாழமை கல்வி துணிவு மூன்றும்
   நிலன் ஆள்பவனுக்கு நீங்காது வேண்டியவை.

4. அறம் வழுவாது தீமைகளை நீக்கி
   மறம் வழுவாது மானம் காப்பது அரசு.

5. பொருளை ஆக்கி ஈட்டிக் காத்து வகைசெய்யும்
   ஆற்றல் உடையதே அரசு.

6. பார்வைக்கு எளிமை சொல்லுக்கு இனிமை
   உடைய மன்னனது நாடு புகழப்படும்.

7. இனிது சொல்லி அளிசெய்யும் அரசன்
   தன்சொற்படி உலகத்தைக் காண்பான்.

8. முறையோடு காக்கும் மன்னன் குடிகட்குக்
   காணும் கடவுள் ஆவான்.

9. கசப்பான சொல்லையும் கேட்கும் பண்புள்ள
   வேந்தனது குடைக்கீழ் உலகம் தங்கும்.

10. கொடை, அன்பு, நேர்மை, குடிபோற்றல்
    உடையவனே மன்னர்க்கு ஒளியாவான்.

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- நாள்தோறும் ஒரு திருக்குறளைப் பொருளுடன் பள்ளியின் தகவல்பலகையில் காட்சிப்படுத்தலாம்.
- திருக்குறள் ஒப்பித்தல் போட்டியை வகுப்புவாரியாக நடத்தலாம்.
- திருக்குறள் கலைவிழாக்கள், ஓவியக் கண்காட்சிகள், நாடக விழாக்கள், குறளின் பொருளை வாழ்வியல் அனுபவங்களோடு பொருத்துதல், குறளை இசையமைத்துப் பாடுதல் போன்ற நிகழ்வுகளைப் பள்ளிகளில் ஒருங்கிணைக்கலாம்.
- இலக்கிய மன்றக் கூட்டங்களில் குறட்பாக்கள் தொடர்பான கதைகள் சொல்லலாம்; நாடகங்களை நடத்தலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து " வினாடி வினா" நடத்தலாம்.
- சான்றோர் வாழ்வில் நிகழ்ந்த சுவையான நிகழ்ச்சிகள் மூலம் திருக்குறள் கருத்துகளை விளக்கலாம்.
- பள்ளி சார்ந்த அழைப்பிதழ்கள், பாராட்டுச் சான்றிதழ்களில் திருக்குறளை அச்சிட்டு வழங்கலாம்.
- உலகப் பொதுமறையாம் திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அன்று.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 69 28/01/2025 15:27:28

ஏழாம் வகுப்பு – தமிழ்
ஆக்கம்

பாட வல்லுநர் குழு

முனைவர் நா. அருள்முருகன்
இணை இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை.

முனைவர் இராம. பாண்டுரங்கன்
இணை இயக்குநர், (பணிநிறைவு),
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

மேலாய்வாளர் குழு

முனைவர் பொன். குமார்
இணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை.

திருமதி ஏ.எஸ். பத்மாவதி
எழுத்தாளர், சென்னை.

முனைவர் து. கணேசமூர்த்தி
முதன்மைக்கல்வி அலுவலர், சேலம் மாவட்டம்.

முனைவர் பூந்துறயான் இரத்தினமூர்த்தி
முதுநிலை ஆசிரியர் (பணி நிறைவு),
கள்ளிப்பட்டி, ஈரோடு மாவட்டம்.

முனைவர் ப. கல்பனா
இணைப்பேராசிரியர்,
பாரதி மகளிர் கல்லூரி (தன்னாட்சி), பாரிமுனை, சென்னை.

முனைவர் சு. தாமரைப்பாண்டியன்
உதவிப் பேராசிரியர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

பாடநூல் ஒருங்கிணைப்பு

முனைவர் மு. தீபாஞ்சி
துணை இயக்குநர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை.

திருமதி மு. செல்வி
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, காட்டூர், மீஞ்சூர் ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம்.

கலை மற்றும் வடிவமைப்புக்குழு

ஓவியம் மற்றும் ஒளிப்படம்

திரு க.த. காந்திராஜன்
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக் கழகம், சென்னை.

திரு. கே. புகழேந்தி
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, கரம்பக்குடி,
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு. அ. ஜேம்ஸ்பாண்ட்
ஓவிய ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு. சி. தெய்வேந்திரன்
ஓவிய ஆசிரியர், அரசு உயர் நிலைப் பள்ளி, மாங்குளம்,
மதுரை மாவட்டம்.

திரு. கா. தனஸ் தீபக் ராஜன், ஓவியர்
திரு. கா. நளன் நான்சி ராஜன், ஓவியர்

பக்க வடிவமைப்பாளர்

பழையவலம் பா. இராமநாதன்
சென்னை.

தரக் கட்டுப்பாடு

திரு. இரா. மனோகர்
திரு. வே.சா. ஜாண்ஸ்மித்
கி. ஜெரால்டு வில்சன்

அட்டைப்படம்

திரு. கதிர் ஆறுமுகம்

ஒருங்கிணைப்பு

திரு. ரமேஷ் முனிசாமி

பாடநூலாசிரியர் குழு

திரு. மு. சேகரன்
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
பெருந்துறை, ஈரோடு மாவட்டம்.

திரு. நி. சிவக்குமார்
விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
குமுளூர், திருச்சி மாவட்டம்.

திரு. கு. சம்பந்தம்
முதுநிலை ஆசிரியர் (பணிநிறைவு)
டி.ஆர்.பி.சி.சி.சி. இந்து மேல்நிலைப் பள்ளி, திருவள்ளூர்.

திரு. சிவ. முரளி
பட்டதாரி ஆசிரியர், ஜே.எப்.மேல்நிலைப் பள்ளி, புலிவலம்,
திருச்சி மாவட்டம்.

திரு. த. ஜீவானந்தம்
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
சிட்டம்பட்டி, மதுரை கிழக்கு ஒன்றியம், மதுரை மாவட்டம்.

முனைவர் ப. மெய்யப்பன்
ஆசிரியப் பயிற்றுநர், வட்டார வளமையம், பவானிசாகர்,
ஈரோடு மாவட்டம்.

திருமதி நா. ஜானகி
பட்டதாரி ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி,
சின்னத்தடாகம், கோவை மாவட்டம்.

திரு. வெ. பாலமுருகன்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, ஆரம்பாக்கம்,
திருவள்ளூர் மாவட்டம்.

திருமதி ப. செந்தில் குமாரி
பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
முதல்மைல், கூடலூர், நீலகிரி மாவட்டம்.

புலவர் க. சிவகுமார்
பட்டதாரி ஆசிரியர், அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, ஏலாக்குறிச்சி,
அரியலூர் மாவட்டம்.

திரு. ம. மீனாட்சி சுந்தரம்
பட்டதாரி ஆசிரியர், அரசு மேல்நிலைப் பள்ளி, சருகுவலையபட்டி,
மதுரை மாவட்டம்.

திரு. மா. பழனி
தலைமை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
சின்னப்பள்ளத்தூர், பென்னாகரம், தருமபுரி மாவட்டம்.

திரு. வே. செந்தில்சிவகுமார்
பட்டதாரிஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, பொட்டல்புதூர்,
திருநெல்வேலி மாவட்டம்.

திரு. ஜே. ஆரோக்ய டொமினிக்ராஜ்
பட்டதாரி ஆசிரியர், கார்மல் மேல்நிலைப் பள்ளி, நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

திரு. இரா. ஜெகநாதன்
இடைநிலை ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி,
கணேசபுரம்– போளூர்,
திருவண்ணாமலை மாவட்டம்.

திரு. ந. ஜெகன்
பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
உத்திரமேரூர், காஞ்சிபுரம்.

திருமதி ஆ. தேவி ஜெஸிந்தா
அரசு உயர்நிலைப் பள்ளி, என்.எம். கோவில், வேலூர்.

7th Std - Tamil_2025_Term_I_Unit 3.indd 70 28/01/2025 15:27:28